வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 20.07.2022 புதன்கிழமை இதழ் : 226 பக்கங்கள் : 16

### குருந்தூர் மலை விவகாரம்:

## விகாரையை அகற்றும் உத்தரவை கைவாங்கியது முல்லை. நீதிமன்றம்!

முல்லைத்தீவு, ஜூலை 20

குருந்தூர்மலையில் புதிய விகாரைகள் கட்டடங்களை அகற்ற உத்தரவிட்ட கட்டளையை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கைவாங்கியது.

நேற்றைய தினம் அந்தப் பகுதிக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரி. சரவணராஜா மற்றும் சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்கள பிரதி சொலிசிட்டர் ஜெனரல், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் களவிஜயம் செய்த பின்னரே கட்டளை

15

### புதிய ஜனாதிபதி தேர்வு;

## ரணில், டலஸ், அநுராகுமார ஆகியோரின் வேட்புமனு ஏற்பு!

கொழும்பு, ஜூலை. 20

1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்துக்கமைய அடுத்த ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய உறுப்பினர்களின் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொண்டதாக பாராளுமன்ற

15

# ரணிலுக்கு எதிராக வாக்களிக்க த. தே. கூட்டமைப்புக்கு அழுத்தம்!

- வெளிநாடொன்றின் விருப்பை நிறைவேற்ற சம்பந்தன் விடாப்பிடி!
- டலஸ், சஜித், பீரிஸ் கூட்டமைப்பினருடன் சந்திப்பு!
- ரணிலை பகைக்கும் முடிவுக்கு சிறீதரன் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 20

**ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக்களிக்குமாறு வெளிநாடொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. இதனை உறுதி செய்யும் விதமாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் இரா. சம்பந்தன் ரணிலுக்கு எதிராக வாக்களிக்குமாறு நெருக்கமான வெளிநாடு ஒன்று கூறுகிறது. இதனை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.**

15



## கூட்டமைப்பு எம். பி. ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்றிரவு ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இரகசியப் பேச்சில் ஈடுபட்டார். ஜனாதிபதி தெரிவு வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பது

15

## பாராளுமன்றில் நடந்தது என்ன?

- ஜனாதிபதி பதவிக்கு மூவர் போட்டி
- ரணில் வழிமொழிவுக்கு எதிர்ப்பு

**கோகிலவாணி**

கொழும்பு, ஜூலை 20

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி பதவிக்காக நேற்று மூவர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸநாயக்க ஆகியோரே இந்த மும்முனைப் போட்டியில் களமிறங்கியுள்ளனர்.

15

## விலகினார் சஜித்!



கொழும்பு, ஜூலை. 20

புதிய ஜனாதிபதிக்கான தேர்வில் இருந்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விலகியுள்ளதாக அறிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தேர்வுக்கான வேட்புமனுத்தாக்கல் நேற்று இடம் பெற்ற நிலையில் தனது ருவிட்டர் பக்கத்தில் நேற்று முற்பகல் 9.45 மணிக்கு

15

## சிறுபான்மை இனக் கட்சிகள் டலஸை ஆதரிப்பதற்கு முடிவு!

கொழும்பு, ஜூலை 20

இன்று புதன்கிழமை பாராளுமன்றில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் டலஸ் அழகப் பெருமவுக்கு வாக்களிப்பதற்கு சிறுபான்மை இனக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்

15

## வாரத்தில் 3 தினங்களே பாடசாலை நடைபெறும்!

கொழும்பு, ஜூலை 20

திகதி முதல் பாடசாலை ஆரம்பமானாலும் வாரத்தில் 3 தினங்களே கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும். மிகுதி இரு நாட்களும் இணைய வழி கற்றலை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை, செப்

எதிர்வரும் 25ஆம்

15

## சகல பாடசாலைகளும் 25ஆம் திகதி ஆரம்பம்!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

நாட்டின் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற சகல பாடசாலைகளின் கல்வி செயல்பாடுகளும் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில், நாளை வியாழக்கிழமை பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று கடந்த

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# காணி, வரி, நிர்வாக அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குங்கள்!

## எழுத்தில் தர ஜனாதிபதி வேட்பாளர்களை கோருகின்றன தமிழ்த் தேசியக் கட்சிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வரி நிவாரணம் மற்றும் காணி நிலம், நிர்வாகம், உட்கட்டமைப்பு போன்ற பிற சலுகைகளுக்கான அதிகாரங்கள், முறையான அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் வரை, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் இந்த உத்தரவாதத்தை ஜனாதிபதி வேட்பாளர்கள் எழுத்தில் தரவேண்டும் என்று ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ஜனாதிபதி வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் விடுதலை கழகம் (புளொட்) இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி ஆராய்ந்தன.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இந்தக் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூடித் தயாரித்த கோரிக்கை வரைவு நேற்று இறுதி செய்யப்பட்டு, வேட்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த வரைவின் முழுவிவரம் வருமாறு,

இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் இந்தத் தீவின் பூர்வீகக் குடிகளின் வழித் தோன்றல்கள். பௌத்தம் இந்நாட்டில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்டது. இரு சமூகத்தினரும் நீண்ட காலமாக இந்த நாட்டில் இணக்கமாக வாழ்ந்து வருகின்றனர். இனி மேலும், அவர்கள் நட்புடன் வாழ முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை. தமிழர்கள் சமத்துவமாகவும் கௌரவத்துடனும் வெளித் தலையீடுகள் இன்றி வாழ்வதற்கான தங்களை தாங்களே ஆளும் உரிமையை நாடுகின்றனர்.

1833 ஆம் ஆண்டில் நிர்வாக நோக்கங்களுக்காக பிரித்தானியரால் நாடு ஒன்றிணைக்கப்படுவதற்கு முன்னர், தமிழர்கள் ஆளுகைக்கு உட்பட்ட தமிழ் மொழி பேசும் ஒரு தனிப்பகுதி இருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் செய்து முடிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் அடுத்தடுத்து ஒற்றையாட்சி அரசியலமைப்புகள் இயற்றப்பட்ட போதிலும் , வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் பெரும்பான்மையாக தமிழ் மொழியே பேசுகின்றனர்.

1987 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், வடக்கு, கிழக்கு பிரதேசம் தமிழர்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரிக்கப்பட்டது. மேலும், இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து மலையகத் தமிழர்கள் உட்பட தமிழர்கள் பல்வேறு பாகுபாடுகளுக்கும் அவதூறுகளுக்கும் உள்ளாகி வருகின்றன.

பிரித்தானியர்களால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நேரத்தில் வழங்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பு, வடக்கு, கிழக்கில் சிறுபான்மையினராகவும் மற்ற இடங்களில் பெரும்பான்மையாகவும் இருந்த சிங்களவர்களிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்தது. இதன் மூலம் வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள ஏழு மாகாணங்களில் உள்ள பெரும்பான்மையினர் இதுவரை தமிழர்கள்மீது ஆட்சியதிகாரமும் மேலாதிக்கம் செலுத்தவும் வழிவகுத்தது. 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம், பெரும்பான்மையான தமிழ் பேசும் பகுதிகளில், சிங்கள மொழி திணிக்கப்பட்டமை அத்தகைய ஆதிக்கத்தின் அடையாளமாகும்.

இதேசமயம், ராஜபக்ஷக்கள் தங்கள் ஊழல் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளை மறைப்பதற்காக இராணுவத்துக்கும் மற்றும் பிற இடங்களிலும், தமிழர்களைப் பயங்கரவாதிகளாகவும் முஸ்லிம்களை தீவிரவாதிகளாகவும் சித்தரித்தனர். சமீபத்திய காலங்களில், சிங்கள பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் மீது கட்டவிழித்த அட்டூழியங்களையும், இதுவரை அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையும் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

சிங்கள - பௌத்த வாக்குகளைப் பெற ஏப்ரல் 21, 2019 ஆம் ஆண்டின் சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். தாங்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்த ஜனாதிபதிக்கு எதிராக வாக்காளர்கள் திரும்பியுள்ளனர்.

இலங்கையில் அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலனுக்காக பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் துர் எண்ணத்தை உருவாக்கி இருந்ததை நாடு இப்போது பெருமளவில் உணர்ந்துள்ளது. ஆனால், இந்த தீவின் பல்வேறு மக்களிடையே இந்த புரிந்துணர்வு ஏற்படுமிடத்து நல்லிணக்கம் உண்மையில் சாத்தியமாகும்.

அரசியல் ரீதியாக நாடு ஒரு புதிய பக்கத்தை திருப்ப ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில், இதுவரை செய்த தவறுகளை மீண்டும் செய்யாதிருக்க அரசியல் தவறுகளை விரைந்து திருத்திக் கொள்ளுதல் அவசியமாகும். எனவே, ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான நாங்கள், நீண்ட காலமாக புரையோடியிருக்கும் இனப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இதன்மூலம் முன்மொழிகிறோம்.

1 ஐ. நாவின் சமூக மற்றும் அரசியல் உரிமைகள் மீதான உடன்படிக்கை. விதிகளின் பிரிவு 1 இன்படி இலங்கைத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்கள் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு தேசத்தை உருவாக்குகிறார்கள். எனவே இதுவரை மத்திய அரசால் நடை முறைப்படுத்தப்பட்ட மேலாதிக்க ஆட்சி முறைமை மற்றும் நிர்வாகம் முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். இது புதிய ஜனாதிபதியின் தேர்தல் முடிந்த ஆறு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்

2. புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு நிலுவையில் உள்ள நிலையில், தற்போதுள்ள தமிழர்களின் உடனடிப் பிரச்னைகளுக்கு பின்வரும் தீர்வுகள் காணப்பட வேண்டும்

அ. ஐ.நா.வில் உறுதியளித்தபடி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்.

ஆ. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலும் தண்டனை பெற்றும் தடுத்து வைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் சிறப்பு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும்.

பயங்கரவாத தடை சட்டத்தின் விதிகள் நாட்டின் சாதாரண குற்றவியல் சட்டத்திற்கு முரணானது என்பதை சுட்டிக்காட்ட தேவையில்லை.

இ. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் ஆணைக்குழு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனதிணைக்களம், வனவிலங்கு திணைக்களம் மற்றும் இராணுவப் படைகள் மற்றும் பல அரச நிறுவனங்களால் அபகரிக்கப்பட்ட அனைத்து மக்கள் காணிகளையும் மக்களுக்கு விடுவித்தல்.

ஈ. வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தை குறைத்து பாரியளவிலான காணிகளையும் கட்டடங்களையும் மக்கள் அல்லது அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் பொருத்தமானதாகக் காணப்படுபவரிடம் மீள ஒப்படைத்தல்.

இராணுவத்தால் அண்மையில் கையகப்படுத்தப்பட்ட புதிய நிலங்களையும் உரிமையாளர்கள் அல்லது சம்பந்தப்பட்ட பகுதியின் மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு இராணுவத்தை பணித்தல் வேண்டும்

உ. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல்.

ஊ. வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் பகுதிகளின் குடிப்பரம்பலை மாற்றும் நோக்கில் மாகாணங்களுக்கு வெளியில் இருந்து மக்களை குடியேற்றுவதற்காக நடைபெறும் அனைத்து நில அபகரிப்புகளையும் நிறுத்த வேண்டும்.

எ. தமிழ் பேசும் பகுதிகளின் தமிழ் மக்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை மாற்றும் நோக்கிலும் குறைக்கும் நோக்கிலும் மேற்கொண்டுள்ள வடகிழக்கு மாகாண எல்லைகளின் அனைத்து மீள் நிர்ணயங்களையும் மதிப்பாய்வு செய்தல். மாகாணங்களுக்கு வெளியில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களுக்கு மாறாக அப்பகுதி மக்களுக்கான போதுமான அளவு அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத்தில் புதிய தேர்தல் தொகுதிகளுக்கு எல்லை நிர்ணயம் தேவையில்லை.

ஏ. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் நோக்கில் முன்மொழியப்படும் தேர்தல் நடைமுறைகள் மீளாய்வு செய்யப் பட வேண்டும்.

இதுவரை பின்பற்றப்பட்ட விகிதாச்சார பிரதிநிதித்துவம் தொடர வேண்டும்.

உ. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் முறையான அரசியலமைப்பு முன்வைக்கப்படும் வரை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட பதின்மூன்றாவது திருத்தத்தில் தற்போதுள்ள அனைத்து ஏற்பாடுகளையும் அமுல்படுத்தவும்.

ஆளுநரின் கைகளில் உள்ள நிதி அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஊ. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முதலீடுகளைப் பெறுவதற்கு மத்திய அரசினால் எந்த தடைகளும் ஏற்படாத வகையில் ஏற்பாடு செய்யப் பட வேண்டும்.

நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தாலும், சர்வதேச வர்த்தக நடைமுறைகளின் அடிப்படையில் போதுமான உத்தரவாதங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவிலான மூலதனத்தைக் கொண்டுவரத் தயாராக உள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் தேவை. நாம் உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 1.5 மில்லியன் தமிழ் புலம்பெயர்ந்தவர்களைக் கொண்டுள்ளோம், அவர்களில் பலர் இந்த நாட்டிற்கு முதலீடுகளைக் கொண்டுவரத் தயாராக உள்ளனர். ஆனால், கொழும்பு அரசாங்கங்கள்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இந்த இடைக்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு சர்வதேச முதலீடுகளை வரவழைத்து பாதுகாக்கும் அதிகாரம் வழங்கப்படுமாயின் பலர் இங்கு வந்து முதலீடு செய்ய விரும்புகின்றனர்.

தேசம் அல்லது தேசங்களின் உரிமைகளை ஒரு முறையான அரசியலமைப்பு அதன் ஏற்பாடுகளில் அங்கீகரிக்கிறது. அத்தகைய அதிகாரங்கள் தாமாகவே சமஷ்டி அமைப்பில் உறுதி செய்யப்படும்.

வரி நிவாரணம் மற்றும் காணி நிலம், நிர்வாகம், உட்கட்டமைப்பு போன்ற பிற சலுகைகளுக்கான அதிகாரங்கள், முறையான அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் வரை, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். முதலீட்டாளர்களுக்கு விடயங்களை எளிதாக்கும் போது, பாரிய அளவில் அன்னிய நேரடி முதலீடுகளை தருவிக்கும் நிலை உருவாகும்.

ஒவ்வொரு வேட்பாளரிடமிருந்தும் அவர்களின் கருத்துக்களை எழுத்துபூர்வமாக கேட்டறிந்தபின், 2022 ஜூலை 20 (இன்று) அன்று எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை பரிசீலிப்போம் - என்றுள்ளது.

ஈழநாடு
Eelanadu
20.07.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 04
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இரண்டு பக்கங்களிலும் தமிழர் விரோதிகள்?

இன்று புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு. இறுதிநேர திருப்புனையாக, சஜித் பிரேமதாஸ வெளியேறி, மொட்டு அணியுடன் கைகோத்திருக்கின்றார். இதனைத் தொடர்ந்து, இதுவரையில் தமிழர் மத்தியில், சஜித் பிரேமதாஸ தொடர்பில் நிலவிவந்த மாயையும் முடிவுக்கு வந்துவிட்டது. அதேவேளை டலஸ் அழகப்பெரும வெற்றிபெற்றால், சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்படுவதற்கான பின்கதவு உடன்பாடுகளும் எட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதேவேளை, தீவிர தமிழர் விரோத சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புக்களான, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரும் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.

ஒப்பீட்டு அடிப்படையில் கடந்த காலத்தில் தீவிர தமிழர் விரோத - இந்திய விரோத நிலைப்பாடுள்ள அனைவரும் இப்போது டலஸ் அழகப்பெருமவின் அணியில், சஜித் பிரேமதாஸவுடன் கைகோத்திருக்கின்றனர். ராஜபக்ஷக்களின் வெற்றிக்காக உழைத்த அனைவரும் இப்போது, சஜித் பிரேமதாஸவுடன் இருக்கின்றனர். அவர்களை தமிழர் தரப்புக்கள் எந்த அடிப்படையில் ஆதரிக்க முடியும்?

ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்தில் மொட்டு அணியினர் இருக்கின்றனர் என்றால் - இப்போது சஜித்தின் பக்கத்திலும் மொட்டு அணியினரே இருக்கின்றனர். இது ஒரு விடயத்தை தெளிவாக காண்பிக்கின்றது - அதாவது, தமிழ் பிரச்னை தொடர்பில் எந்தப் பக்கத்திலும் ஒரு கட்டத்திற்கு மேல் பேச முடியாது. ஏனெனில், அனைத்து பக்கத்திலும் தீவிரவாதிகளின் கையே ஓங்கியிருக்கின்றது. ஒப்பீட்டு அடிப்படையில், டலஸ் - சஜித் கூட்டின் பக்கத்தில்தான் அதிகமான தமிழர் விரோத - பௌத்த தேசியவாத தரப்பினர் இருக்கின்றனரெனத் தெரிகின்றது. இவர்கள் இருக்கின்ற பக்கத்திற்கு எவ்வாறு முஸ்லிம்கள் வாக்களிக்கப் போகின்றனர் என்னும் கேள்வியை கேட்க முடியுமானாலும் கோட்டாபயவின் 20ஆவது திருத்தத்துக்கே வாக்களித்தவர்கள் - இப்போது அலட்டிக் கொள்வார்களா என்னும் கேள்வியும் குறுக்கிடுகின்றது.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே தமிழ் அரசு கட்சியினர் வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர் - குறிப்பாக தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்களான எம். ஏ. சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் தொடர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்கவை பொதுவெளிகளில் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இதன் மூலம் அவர்களின் தெரிவாக சஜித் பிரேமதாஸவே முன்னிறுத்தப்பட்டிருந்தார். இவ்வாறானதொரு சூழலில்தான், சஜித்-டலஸ் கூட்டு உருவாகியிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ் அரசு கட்சியின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகியோர் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவுள்ளனர்? விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில போன்றவர்கள் விடுதலைப் புலிகளை அழிக்கும் ராஜபக்ஷக்களின் யுத்தத்தை தொய்வடைந்துவிடாமல் பாதுகாத்ததில் பெரிய பங்காற்றியவர்கள். இவ்வாறானவர்களால் ஆதரிக்கப்படும், டலஸ் அழகப்பெருமவை சிறீதரன் போன்றவர்களால் ஆதரிக்க முடியுமா? கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆதரிக்க முடியுமா?

ஒரு தெளிவான சிந்தனையும் வேலைத்திட்டமும் இல்லாமையால், தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் தாச்சியிலிருந்து அடுப்புக்குள் குதித்த கதையாகவே தொடர்கின்றது. நேற்றுவரையில் சுமந்திரன், சாணக்கியன் போன்றவர்கள், முற்றிலுமாக சஜித் பிரேமதாஸவுடன் நின்றனர். ஆனால், சஜித்தோ இப்போது, டலஸ்-விமல்- உதயகம்மன்பில அணியில் கரைந்திருக்கின்றார். ரணிலை தோற்கடிக்க வேண்டும் என்பது மட்டுமே இப்போது சஜித்தின் ஒரேயொரு தெரிவாக இருக்கின்றது. தனது ஆசைக்காக, அவர் இதுவரையில் கூறிவந்த அனைத்து அரசியல் நிலைப்பாடுகளையும் கைவிட்டிருக்கின்றார். இவ்வாறான ஒருவரை நம்பி தமிழர்கள் அரசியல் தீர்வுப் பயணம் மேற்கொள்ளலாமா?

நாம் தொடர்ந்து ஒரு விடயத்தைக் கூறிவருகின்றோம். தமிழர்கள், தங்களை அரசியல் ரீதியில் ஒழுங்குபடுத்திக் கொண்டு, சந்தர்ப்பங்களை புத்திசாதுர்யமாக பயன்படுத்திக் கொண்டால் மட்டும்தான், தமிழர்களுக்கு நன்மையுண்டாகும். தென்பகுதியில் இருக்கும் எவரை நம்பியும் தமிழர்கள் அரசியல் பயணத்தைத் திட்டமிடக்கூடாது. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்திலும் இதுதான் நடந்தது. இப்போதும் அதுதான் நடந்திருக்கின்றது. எப்போதுமே இப்படித்தான் நடக்கும்.

# இனி ஒரு விதி உருவாகுமா?

அலசுவது இராஜதந்திரி

*இலங்கை பாராளுமன்றில் இன்று புதிய ஜனாதிபதி இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை இராஜனாமா செய்ததையடுத்து 1993ஆம் ஆண்டின் பின்னர் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றில் இடம்பெறுகின்றது.*

*1993ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதியான ஆர். பிரேமதாஸவின் மரணத்துக்குப் பின்னர் பாராளுமன்றம் ஊடாக ஐக்கிய தேசிய கட்சி சார்பாக டி. பி. விஜயதுங்க தெரிவானார். இதனையடுத்து தற்போது ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமா செய்ததையடுத்து இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் இடம்பெறுகின்றது.*

*இதேவேளை நேற்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் தருணத்தில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ தாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகியுள்ளாரெனத் தெரிவித்துள்ளார். நாட்டின்மீதும் மக்களின்மீதும் கொண்டுள்ள நல்லபிமானம் காரணமாக தாம் இன்றைய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தலிலிருந்து விவகுகிறார் என்று சஜித் அறிவித்துள்ளார்.*

*அத்துடன், இன்றைய தேர்தலில் தனது ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பாக போட்டியிடும் டலஸ் அழகபெருமவை ஆதரிக்குமென சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.*

*இதனையடுத்து பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழக பெருமா மற்றும் அநுரகுமார திஸநாயக்க ஆகியோரே இன்றைய தேர்தலில் போட்டியிடுகின்றனர்.*

*இன்றைய தேர்தல் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் நிறைந்ததாகவே இருக்கும். ஏனெனில், ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ போட்டியிலிருந்து விலகியுள்ளமையை அடுத்து ஒரு மும்முனை போட்டி இன்றைய இரகசிய வாக்கெடுப்பின்போது இடம்பெறும்.*

*இன்றைய தேர்தலில் சிறுபான்மையின கட்சிகளே வெற்றியாளரைத் தீர்மானிப்பதில் முக்கியமானவையாக இருக்கலாம் எனக்கருத முடியும்.*

*வெற்றியாளர்கள் எவராகவும் இருக்கலாம். ஆனால், அவர்கள் முன்பாகவுள்ள முக்கிய பணி நாட்டின் பொருளாதாரத்தை சீர்திருத்துவதாகவே இருக்க முடியும். ஏனெனில், நாட்டின் இன்றைய பொருளாதார நிலவரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது.*

*எரிபொருளுக்காகவும் சமையல் எரிவாயுவுக்காகவும் நாட்டின் நாலாபுறங்களிலும் மக்கள் நீண்ட வரிசைகளில் கால்கடுக்க நிற்பதையும், இதன்காணமாக பதினைந்துக்கும் மேற்பட்ட மரணங்கள் வரிசையில் காத்திருந்தோர் மத்தியில் நிகழ்ந்துள்ளதையும் அறிய முடியும்.*

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய போட்டியாளரிடையே சிரேஷ்ட அரசியல்வாதியாக இருக்கின்றார். ஏனைய இருவரும் ரணிலோடு ஒப்பிடுகையில் அரசியலில் குறைந்தளவு அனுபவமுள்ளோராவர். இருந்தபோதிலும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தோல்வியுற்ற ரணில் விக்கிரமசிங்க, நியமன உறுப்பினராகவே பாரளுமன்றினுள் பிரவேசிக்கலானார்.*


*புதிய ஜனாதிபதியைப் பொறுத்தவரை பொருளாதார ரீதியாக அவர் கையாள வேண்டிய பணிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய நிலையில் சர்வதேச தொடர்புகளோடு ஏற்கனவே போதியளவு பரிச்சயம் உள்ளவராக புதிய ஜனாதிபதி இருக்க வேண்டியவராகின்றார்.*

*இதுவிடயத்தில் நீண்டகாலமாகவே பாராளுமன்ற உறுப்பினராகவும் பின்னர் பிரதமராகவுமிருந்த ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச மட்டத்தில் நன்கறியப்பட்டவராக இருக்கின்றார். டலஸ் அழகபெரும மற்றும் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவை போல சர்வதேச மட்டத்தில் பெரிதும் பிரபலமானவர்களாகக் காணப்படவில்லை.*

*இன்று புதிய ஜனாதிபதி தெரிவாகும் பட்சத்தில் கடந்த காலங்கள் என்று குறிப்பிடுவதைவிட கடந்த மூன்று மாத காலங்களில் கொழும்பில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட நெருக்கடி குறித்து கவனத்தில் கொள்ளவேண்டியதே அவசியமானதாகும். ஏனெனில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இறுதியாக மக்களாலேயே நிராகரிக்கப்பட்டுள்ளதோடு ஒரு புதிய இளம் சந்ததியினர் அரசியல் மற்றும் நாட்டின் பொருளாதார விடயங்கள் குறித்து விழிப் படைந்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.*

*பொருளாதார சீர்திருத்தம் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆகியவற்றோடு இலங்கை அரசியலில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவரால் இனி ஒரு புதிய விதி உருவாக்கப்படுமா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 20 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 04
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி




**மேடம்**
குடும்பத்தை பற்றி கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மோதல்கள் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மரியாதை கூடும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கடகம்**
இழுபறியாக இருந்த வேலைகள் இனிதே முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**கன்னி**
ஆரோக்கியத்தில் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். உங்கள் முயற்சி வெற்றியாகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவுடன் செயல்படுவார்கள். வருமானம் அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வீடுமனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். எதிர்பார்த்த பணம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும் . உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசு காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அவசரத்திற்கு வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். நன்மைகள் நடக்கும் நாள்.

**மீனம்**
வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

# அ. தி. மு. க. பொதுக்குழுவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

*சென்னை, ஜூலை 20*

அ. தி. மு. க. பொதுக் குழுவுக்குத் தடை விதிக்க மறுத்த தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குமீதான விசாரணையை ஒத்திவைத்தது சென்னை உயர்நீதிமன்றம்.

அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தை கூட்ட அனுமதிக்கக்கூடாது எனக் கோரி ஓ. பன்னீர்செல்வம் தரப்பில் கடந்த 11ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை விசாரித்து தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம், கட்சி விதிகளுக்கு உட்பட்டு பொதுக்குழுக் கூட்டத்தை நடத்தலாம். பொதுக்குழுவில் செயல்முறையில் விதிகள் மீறப்பட்டால் மீண்டும் நீதிமன்றத்தை அணுகலாம் என்று உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தனி நீதிபதி அமர்வு உத்தரவை எதிர்த்து, ஓ. பன்னீர்செல்வம் தரப்பில் கடந்த 15ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், ஒருங்கிணைப்பாளர் கையொப்பம் இல்லாமல் உரிய அழைப்புக் கடிதம் இல்லாமல் இந்தப் பொதுக்குழு கூட்டப்பட்டுள்ளது. எனவே, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை இரத்து செய்ய வேண்டும். 11ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவை சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

இந்த மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு இன்னும் பட்டியலிடப்படாமல் உள்ளது. இந்த நிலையில் எடப்பாடி கே பழனி சாமி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், தங்கள் தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னரே இந்த வழக்கில் எந்தவொரு உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று அ. தி. மு. க. பொதுக் குழுவுக்குத் தடைவிதிக்க மறுத்த தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

(ஐ)

# தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவராக உதயகுமார்!

*சென்னை, ஜூலை 20*

தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவராக அ. தி. மு. க. முன்னாள் அமைச்சரும், திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர். பி. உதயகுமார் நியமிக்கப்படுகிறார் என்று கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு, கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி மு. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கட்சியின் சார்பில், சட்டமன்ற கட்சித் துணைத் தலைவராக முன்னாள் அமைச்சரும், திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர். பி. உதயகுமாரும், துணைச் செயலாளராக, முன்னாள் அமைச்சரும், போளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தியும், கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவானார்கள்” என்று அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# அரசியல் பேசாமல் ஆதீனங்கள் ஒதுங்கியிருப்பதே நல்லது!

**தருமபுரம் ஆதீன முதல்வர்**

*திருவாரூர், ஜூலை 20*

தற்போதைய சூழலில் அரசியல் பேசாமல் ஆதீனங்கள் ஒதுங்கி இருப்பது நல்லது என்று தருமபுரம் ஆதீனம் கருத்து தெரிவித்தார்.

தருமபுரம் ஆதீனம் தென்கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்று முன்தினம் திருவாரூர் வந்தார்.

இதன்போது, அங்கு பேசிய அவர், “ஆதீனங்கள் அரசியல் பேசக்கூடாது என்ற கருத்து குறித்த கேள்விக்கு, இரண்டாம் குலோத்துங்க சோழனின் அரசவையில் முதன்மை அமைச்சராக இருந்த சேக்கிழார், பின்னாளில் சமயத் தலைவரானார்.

அதுபோல, சமயத் தலைவர்கள் பலர் ஆட்சி அதிகாரத்திலும் பங்கு பெற்றவர்களாகவே உள்ளனர். அந்தக் காலத்தில் ஆன்மிகமும் அரசியலும் கலந்துதான் இருந்திருக்கிறது. இருப்பினும், தற்போதைய சூழலில் ஆதீனங்கள் அரசியல் பேசாமல் ஒதுங்கி இருப்பதே நல்லது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாக செயல்படுகிறது. அவர்களின் முழு ஒத்துழைப்பின் காரணமாகவே நாங்கள் பல இடங்களில் விரைவாக குடமுழுக்கு மற்றும் கோயிலுக்குச் சொந்தமான இடங்களை மீட்பது போன்ற பணிகளைச் செய்ய முடிகிறது.

சைவ சித்தாந்தங்களை வளர்க்கும் வகையில், எங்கள் கல்லூரியின் பாடத் திட்டத்தில் பிஏ சைவ சித்தாந்தம் என்ற பாடப் பிரிவை கொண்டு வந்திருக்கிறோம். வேலைவாய்ப்புக்கு வெளிநாடுகளில் இந்தப் படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது - என்றார்.

(ஐ)

# ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு தமிழ்நாட்டில் நிறைவடைந்தது!

*சென்னை, ஜூலை 20*

தமிழகத்தைச் சேர்ந்த 234 சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் வாக்குகளை செலுத்திய நிலையில், குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது.

இந்தியாவின் 5ஆவது குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் வாக்குப்பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை இந்த வாக்குப்பதிவு நடைபெற்றது.

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது வாக்கை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி. மு. க. தோழமை கட்சி உறுப்பினர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர்.

அதேபோல், அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி பகல் 2.30 மணிக்கு தனது வாக்கை செலுத்தினார். அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

அனைவரும் வாக்குகளை செலுத்திய பின்னர், வாக்குப் பெட்டிகள் சீலிடப்பட்டு, பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் விமானம் மூலம் டில்லிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. வரும் 21ஆம் திகதி இந்த வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

(ஐ)

# ஜனாதிபதித் தெரிவின்போது தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொள்ளவேண்டும்!

## யாழ்.பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**ஜனாதிபதி தெரிவின்போது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டும் தமிழ்க் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயல்படவேண்டுமென யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெல்சின் தெரிவித்தார்.**

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு தமிழ் தரப்புகளுக்கு இது ஒரு முக்கியமான தருணம். இன்றைய கால கட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டும் தமிழ் கட்சிகள் செயல்படவேண்டும். நீங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் எமது தமிழ் மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் ஏற்கும் தருணத்தில் நடுநிலையாக செயல்படாமல் அந்த வேட்பாளருக்கு முழு ஆதரவை நீங்கள் வழங்க வேண்டுமென மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நீங்கள் தமிழ் மக்களின் உண்மையான தேவைகளை புரிந்து இருப்பீர்கள் என நம்புகிறோம். காலங்காலமாக தமிழ் மக்கள் உங்கள் வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்து இருக்கின்றவேளையில் இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் செயலாற்ற வேண்டும்.

தென்னிலையில் மக்கள் அனைவரும் இக்கட்டான சூழலிற்கு தள்ளப்பட்ட வேளையில் அவர்களின் தலைவர்களுக்கு எதிராக மக்கள் போராடும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். அதே நிலைமையை கருத்திற்கொண்டு உங்களுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் ஒரு காலகட்டத்தில் நம்பிக்கையை இழந்து செயல்படும் பட்சத்தில் மாணவர் சமூகமாக இருக்கின்ற நாங்கள் மக்களுடன் இணைந்து செயல்படுவோம் என சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறோம்-என்றார். (அ)

# நாட்டில் மீண்டும் கொரோனா அபாயம்

## நேற்று முன்தினம் 62 தொற்றாளர்கள் அடையாளம்

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் மீண்டும் கோவிட்-19 தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் 30 தொடக்கம் 40 நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் தொற்று நோய் பிரிவின் தலைவர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாட்டில் 62 பேர் கோவிட்-19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (அ)

# மே-9 வன்முறை சம்பவம் இதுவரை 3,215 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 20

கடந்த மே-9ஆம் திகதி நாடளாவிய ரீதியாக இடம்பெற்ற அமைதியின்மையுடன் தொடர்புடையவர்கள் தொடர்ந்தும் கைதாவதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை 3,215 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது கடந்த மே-9ஆம் திகதி பொதுஜன பெரமுன தரப்பினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனையடுத்து நாடுமுழுவதும் அமைதியின்மை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 1 இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்க முடியும்

## அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, ஜூலை 20

டீசல், எரிவாயு, கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படுமானால் பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 50 ரூபாவினால் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

120 ரூபாவாக இருந்த டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 460 ரூபாவாக அதிகரித்து தற்போது அதில் 20 ரூபாவை அரசாங்கம் குறைத்துள்ளது. இது ஒரு நகைப்புக்குரிய விடயமாகும்.

எனவே, அதிகரிக்கப்பட்ட எரிவாயு கொள்கலன் விலை, கோதுமை மா மற்றும் டீசல் ஆகியவற்றின் விலைகளை குறைக்குமாறு தாம் அரசாங்கத்தை கோருகிறோம்.

இதுதவிர, மண்ணெண்ணெயை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமானால் பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 50 ரூபாவாலும், ஏனைய வெதுப்பக உற்பத்தி உணவு பண்டங்களின் விலையை 25 ரூபாவாலும் குறைக்க முடியும்-என்றார். (அ)

# வவுனியா பாடசாலைக்குள் பகலில் சைக்கிள் திருட்டு!

வவுனியா, ஜூலை 20

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை வளாகத்துக்குள் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் ஒரு இளைஞன் என சி.சி.ரி.வி காணொளியின் மூலம் இணங்காணப்பட்டுள்ளது.

பாடசாலையின் வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்விசாரா உத்தியோகத்தர் ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

அந்த உத்தியோகத்தர் அலுவலகத்துக்குள் வேலையாக இருந்தபோது பாடசாலை வளாகத்துக்குள் வந்த இளைஞன் சைக்கிளைத் திருடி சென்றுள்ளார். அதற்கான சி.சி.ரி.வி காட்சிகள் முழுமையாக கிடைக்கப்பெற்றுள்ளது.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் உரிமையாளர் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிஸாரால் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் அண்மைக்காலமாக வவுனியாவில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகெங்கும் வேகமாக பரவும் புதிய ஒமிக்ரோன் கட்டுப்படுத்த இலங்கையில் நடவடிக்கை இல்லை!

கொழும்பு, ஜூலை 20

உலகம் முழுவதும் புதிய ஒமிக்ரோன் புதிய கோவிட் திரிபு குறித்து இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

இன்றைய நிலவரப்படி, உலகம் முழுவதும் கோவிட் தொற்று வேகமாகப் பரவுவதுடன், இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹன ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஒரு புதிய ஒமிக்ரோன் திரிபு வேகமாக பரவி வருகிறது. எனினும் இலங்கைக்குள் நுழையும் யாரும் கோவிட் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. இது ஆபத்தானது எனவும் உபுல் ரோஹன கூறினார்.

புதிய ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான 3 பேர் இஸ்ரேலில் கண்டறியப்பட்டுள்ளனர். பி.ஏ.2.75 எனப்படும் இந்த புதிய திரிபு தடுப்பூசிகளுக்கு அடங்காமல் விரைவாக பரவி நோய் எதிர்ப்பு சக்திக்கு எதிரான போராடக் கூடும் என விஞ்ஞானிகள் பி.ஏ.5 உட்பட ஏனைய ஒமிக்ரோன் பிறழ்வுகளை விட புதிய துணைத் திரிபு மிகவும் தீவிரமான நோயை ஏற்படுத்துமா என்பது குறித்து ஆதாரபூர்வமாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

இதற்கிடையில், பி.ஏ.2.75 ஒமிக்ரோன் துணை திரிவுடன் இருவர் சிங்கப்பூரில் கண்டறியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகளிடம் யூரியா மூடைகளின் எடைக்கு மாத்திரமே பணம் அறவீடு

கொழும்பு, ஜூலை 20

எதிர்காலத்தில் யூரியா உர மூடைகளின் எடைக்கு மாத்திரம் விவசாயிகளிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹன புஸ்பகுமார பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரமானது கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள மூன்று இயந்திரங்கள் மூலம் 50 கிலோ மூடைகளில் அடைக்கப்பட்டு, ஒவ்வொரு பையில் உள்ள உரத்தின் எடை இயந்திரங்கள் மூலம் அளவிடப்படுகிறது.

தம்புள்ளை பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட யூரியா உரப் பொதிகளில், அச்சிடப்பட்டுள்ள எடைக்கு ஏற்ற அளவு உரங்கள் இல்லை என குற்றம்சாட்டப்பட்ட நிலையில் ஏதேனும் பிழை ஏற்பட்டால் விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படாத வகையில் விவசாய அமைச்சு செயற்படும் என செயலாளர் குறிப்பிட்டார்.

அரசின் இரண்டு உர நிறுவனங்களையும் நேற்று பார்வையிட்ட பின்னர் விவசாய அமைச்சின் செயலாளர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். (அ)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிராக கோலாலம்பூரில் தமிழ் மக்கள் போராட்டம்!

கோலாலம்பூர், ஜூலை 20

சிங்கப்பூரில் தற்போது நிலைகொண்டுள்ள இலங்கையின் முன்னாள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மலேசியத் தமிழர்கள் நேற்று முன்தினம் அணி திரண்டு குரல் எழுப்பினர்.

தலைநகர் கோலாலம்பூரில் உள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் முன் பினாங்கு மாநில் துணை முதல்வரும் நாடுகடந்த தமிழீழ அரசின் மதியுரைஞர் குழுப் பிரதிநிதியுமாகிய பேரா.இராமசாமி தலைமையில் அணி திரண்ட தமிழர்கள், இனப்படு கொலையாளியைச் சிங்கப் பூர் வெளியேற்றி சர்வதேச நீதிமன்றிடம் கையளிக்க வேண்டும் என்ற முழக்கத்தை எழுப்பினர்.

மலேசியத் தமிழர் அரசியல் பிரதிநிதிகளான சதீஸ் முனியாண்டி, டேவிட் மர்செல் உட்பட பல தமிழர் அமைப்பினர் இதில் பங்கெடுத்திருந்தனர்.

மலேசியாவுக்கான சிங்கப்பூர் தூதுவரைச் சந்தித்துக் கோரிக்கை மனுவைக் கையளித்து, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சிங்கப்பூரில் இருந்து வெளியேற்றப்பட்டு சர்வதேச நீதிமன்றிடம் இனப்படுகொலையாளியான கோட்டாபயவைக் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷவைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு நாடு கடந்த தமிழீழ அரசு தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையின் அரசியல், இராணுவத் தலைவர்களுக்கு எதிராக ஐ.நா. உறுப்பு நாடுகள், சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் அம்மையார் முன்னர் வலியுறுத் தியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேடுதல், கைது செய்யும் உரிமை உள்ளிட்ட அவசரகால விதிகள் வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு, ஜூலை 20

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் தேடுதல் மற்றும் கைது செய்யும் உரிமை உள்ளிட்ட அவசரகாலச் சட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி அவசரகாலச் சட்டங்கள் பொது அத்தியாவசிய சேவைகள், நுழைவு உரிமை, தேடுதல் மற்றும் கைது செய்யும் உரிமை, குற்றங்கள் மற்றும் தண்டனைகள், விசாரணைகள் மற்றும் சோதனைகள் மற்றும் இதர விபரங்கள் தொடர்பான ஏழு பகுதிகள் பிரகடனத்தில் விபரிக்கப்பட்டுள்ளன.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் கீழ் இலங்கையில் நேற்று முன்தினம் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நேற்று முதல் இலங்கை முழுவதும் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக இலங்கையில் பொது அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி தெரிவில் போட்டியிடுவோர் சொத்துகளை பகிரங்கப்படுத்தவேண்டும்

### டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

நாட்டின் அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் முக்கியமான பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு முன்னதாக இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தமது சொத்துக்களை பகிரங்கப்படுத்தவேண்டும் என்று டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கோரியுள்ளது.

ஊழல் தலைவர்களை இனியும் சகித்துக் கொள்ளமாட்டோம் என்ற தெளிவான செய்தியை இலங்கையர்கள் வழங்கியுள்ளனர். இந்த நிலையில் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் இலங்கையின் குடிமக்களுக்கு தங்கள் சொத்துக்களை பகிரங்கமாக அறிவிக்கவும் வெளிப்படைத்தன்மைக்கான தனிப்பட்ட அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதும் அவசியம் என்று இலங்கை டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் குறிப்பிட்டுள்ளது. இலங்கை பாராளுமன்றத்தில் நீண்டகாலம் அங்கம் வகிக்கும் தற்போதைய வேட்பாளர்கள் மக்கள் தங்கள் மீதுள்ள நம்பிக்கையை வலுப்படுத்த புதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர்களின் சொத்துகளின் பொது அறிவிப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் மக்களுக்கு அவர்களின் உறுதிப்பாட்டை நிரூபிக்க ஒரு முக்கியமான படியாக இருக்கும் என்றும் இலங்கை டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## இலங்கையை விட்டு தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார் கோட்டாபய

### அமெரிக்காவின் சமந்தா பவர் கருத்து



**நியூயோர்க், ஜூலை 20**

**அமைதியின்மை காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரக நிர்வாகி சமந்தா பவர் குறிப்பிட்டுள்ளார்.**

உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிலை குறித்து கருத்துரைத்துள்ள அவர், இலங்கை அரசாங்கம் வீழ்ச்சியடைந்த கடைசி அரசாங்கமாக இருக்காது என்று கூறினார்.

ஊழல் மற்றும் பணவீக்கத்தினால் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக, இலங்கையின் ஜனாதிபதி பதவிவிலகி தப்பி ஓடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

தீவிரமடைந்த மக்கள் போராட்டத்தின் மூலம் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 13ஆம் திகதி இலங்கையை விட்டு மாலை தீவுக்கு இராணுவ விமானத்தில் தப்பியோடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையைவிட்டு அவுஸ்திரேலியர்கள் தாதாமாக முன்வந்து வெளியேற அனுமதி

கொழும்பு, ஜூை. 20

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகப் பணியாளர்களை சார்ந்திருப்பவர்கள் தானாக முன்வந்து நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் நாடளாவிய ரீதியில் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.அத்துடன் குறுகிய அறிவித் தலில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படலாம் என வும் அவுஸ்திரேலிய தூதரகம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

பெரிய ஆர்ப்பாட்டங்களின் போது பல வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், தமது குடிமக்கள், ஆர்ப்பாட்டங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தவிர்த்து, எல்லா நேரங்களிலும் தம்முடன் தொடர்புடைய பயண மற்றும் அடையாள ஆவணங்களை எடுத்துச் செல்லவேண்டும். என்றும் உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றவேண்டும் என்றும் அவுஸ்திரேலிய தூதரகம் கோரியுள்ளது.

இலங்கை முழுவதும் பொது ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆர்ப்பாட்டங்கள் போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தும்.

எனவே பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக இலங்கைக்கு பயணிக்க வேண்டிய தன் அவசியத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு தமது குடிமக்களுக்கு தொடர்ந்து அறிவுறுத்தி வருவதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. (அ)

# எம்.பி. பதவியை சவாலுக்குட்படுத்திய ரணிலுக்கு எதிரான சட்ட சிக்கலை நீக்கியது உயர்நீதிமன்றம்!

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

நீதியரசர்களான காமினி அமரசேகர ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழாம், இந்த மனுவை நிராகரித்துள்ளது.

காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட மனு உள்ளிட்ட பல காரணங்களை கருத்திற்கொண்டு இந்த மனுவைத் தொடர்வதற்கு அனுமதி வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியில்லாவர் என அறிவிக்குமாறு கோரி வினிவித பெரமுனவின் பொதுச் செயலாளர் நாகானந்த கொடித்துவக்கு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா பூர்வாங்க ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

மேலும், பொருள் உண்மைகளை தவறான முறையில் மறைத்ததற்காக மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த இதேபோன்ற மனு, உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமையை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசியப் பட்டியல் வேட்பு மனுக்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவிடமிருந்து கட்சிச் செயலாளர்களால் பெறப்பட்ட நாளில் இருந்து ஒரு வாரத்திற்குள் தேர்தல் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனினும் கட்டாய காலத்திற்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தமக்கு வழங்கிய அறிவித்தல்களுக்கு இணங்கத் தவறியதாக மனுதாரர் குறிப்பிட்டிருந்தார். (அ)

# கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் ரணிலுக்கு ஆதரவு வழங்குவர்?

கொழும்பு, ஜூலை 20

**ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பின் போது பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோ, கோவிந்தன் கருணாகரம் ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், செல்வம் அடைக்கலநாதன், டலஸ் அழகப்பெருவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என வலியுறுத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இறுதியில் பொது இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை என கூறப்படுகின்றது.

பெரும்பாலும் வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு நடுநிலைமை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் இறுதி நேரத்திலேயே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலின் போது இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்படுமாக இருந்தால், கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)



## ராஜபக்ஷக்களின் கைக்கூலி ரணில்!

*ஹற்றனில் நேற்றுப் போராட்டம்*

கொழும்பு, ஜூலை 20

"ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்"என்ற தொனிப் பொருளில் ஹற்றனில் தொழிற் சங்கங்கள் மற்றும் வெகுசன அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற்றனர்.

ஹற்றன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக நேற்று மதியம் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இடைநிறுத்தாது முடிவு கட்டுவோம், மக்களை வெற்றி பெறச் செய்வோம், இடைநிறுத்தாது நிறைவு செய்வோம், திருடர்களை விரட்டியடிப்போம், ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம் என்ற பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும், மீண்டும் ஜனாதிபதியாக வரக்கூடாது என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், அவ்வாறு இல்லாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் சூளுரைத்தனர்.

அத்துடன், கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் இடம்பெறும் போராட்டத்துக்கு தமது முழு ஆதரவையும், மலையக மக்கள் சார்பில் வெளிப்படுத்தினர். (அ)

## விமல், உதய கம்மன்பில, வாசுதேவ டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு

கொழும்பு, ஜூலை. 20

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்ட சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் குழு, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு என தெரிவித்து சஜித் பிரேமதாஸ போட்டியில் இருந்து விலகியிருந்தார்.

இதேவேளை, டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க தாம் ஆதரவு என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தமை குறிப் பிடத்தக்கது. (அ)

## சுதந்திரக் கட்சி நிச்சயமாக வாக்குகளைப் பயன்படுத்தும்

*தயாசிறி ஜயசேகர கூறுகிறார்*

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதியை தெரிவு செய்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிச்சயமாக வாக்குகளைப் பயன்படுத்தும் என கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் பாராளுமன்றத்தில் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை எடுப்பதற்குப் பதிலாக, ஒருமித்த கருத்தை எட்டுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## வெளிநாட்டு தபால் சேவை கட்டணங்களிலும் மாற்றம்

கொழும்பு, ஜூலை 20

வெளிநாட்டு தபால் சேவை கட்டணத்தை அதிகரிக்க இலங்கை தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டணம் அதிகரிக்கப்படுமென தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்தார்.

இதனிடையே, அமெரிக்கா, நெதர்லாந்து இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருட்களை ஏற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நாட்டிற்கான விமானங்களின் சேவைகள் வரையறுத்தும் இடைநிறுத்தப் பட்டும் உள்ள காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் குறிப்பிட்டார். (அ)

## பஸ் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஜூலை 20

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதை அடுத்து பஸ் கட்டணங்கள் 2.23 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விலை குறைப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஆகக் குறைந்த கட்டணம் 38 ரூபாவாகும். (அ)

## இனி "ரோக்கன்" இல்லை

கொழும்பு, ஜூலை 20

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு, இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து "ரோக்கன்" களும் செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் "தேசிய எரிபொருள் உரிமத்தின்" படி வாகன பதிவு எண்ணின் கடைசி இலக்கத்தின் அடிப் படையில் மட்டுமே எரிபொருள் வழங்கப்படும் என்று பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ தெரிவித்தார். (அ)

## மின் கட்டணம் உயரும்

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள மின்சாரக் கட்டணம் 69 சதவீதத்தால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபை 130 சதவீத கட்டண உயர்வை கோரிய போதிலும், குறைந்த மின்சார பாவனையாளர்களுக்கு சலுகைகளை வழங்கி இந்த கட்டண உயர்வு அமுல்படுத்தப் படும் எனவும் ஜனக ரத்நாயக்க மேலும் கூறினார். (அ)

## 18 நாட்களில் மாத்திரம் இலங்கைக்கு 25547 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள்

கொழும்பு, ஜூலை 20

இந்த மாதத்தின் கடந்த 18 நாட்களில் மாத்திரம் 25 ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது கடந்த ஜூன் மற்றும் மே மாதத்தை விட சற்று அதிகமாகும் என சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித் துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 4 இலட்சத்து 36 ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (அ)

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு மீது பொலிஸ் தாக்குதல்

வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு ஒருவரை பொலிஸ் தாக்கியதாக தெரிவித்து மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நெளுக்குளம் நான்காம் கட்டை பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் நேற்று எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் மக்கள் நின்றுகொண்டிருந்தபோது பொலிஸ் பொறுப்பதிகாரி மதகுரு ஒருவரை தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு நின்ற மக்கள் வவுனியா மன்னார் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தாக்கப்பட்ட மதகுருவிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் அங்கு பதட்ட நிலைமை காணப்பட்டதோடு நீண்ட நேரமாக வவுனியா, மன்னார் பிரதான வீதியின் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. இதனை தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட மதகுருவிடம் மன்னிப்பு கேட்டதற்கு இணங்க ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (அ)

## சஜித்தின் தியாகத்தை பாராட்டினார் டலஸ்!

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி போட்டியிலிருந்து சஜித் பிரேமதாஸ வெளியேறி, மாபெரும் தியாகத்தை செய்துள்ளார் என ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசேட காணொளி வாயிலாக கருத்து வெளியிட்டுள்ள அவர், இன்று இந்த நாட்டுக்கு ஐக்கியமான ஒரு அரசியல் கலாசாரம் தேவைப்படுகிறது.

மக்களும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் குரல் புரியாமல் இருந்தது.

நேற்று வரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதாகவே தீர்மானித்திருந்தார்.

இன்று அவர் மாபெரும் தியாகத்தை செய்துள்ளார். ஒரு கட்சியினாலோ ஒரு தலைவரினாலோ இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முடியாது. மக்களை பிரச்னைகளில் இருந்து வெளியே கொண்டுவர நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.- என்றார். (அ)

# அன்று ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்கவின் தெரிவும் ஜுலை 20 ஜனாதிபதி தெரிவும்: ஒரு பார்வை

**நா**டாளுமன்றம் ஊடாக அன்று ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க தெரிவு செய்யப்பட்ட முறையும் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவும் உள்ள ஒற்றுமைகளை சிறிலங்கா நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நிஹால் செனிவிரட்ன விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை சிங்கள இணையத்தளம் ஒன்று நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நிஹால் செனிவிரட்னவின் விளக்கத்தினை வெளியிட்டுள்ளது. அதன் முக்கிய பகுதிகள்:

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச படுகொலை செய்யப்பட்ட போது நிஹால் செனிவிரட்ன நாடாளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளராக இருந்தார். ஜனாதிபதியின் படுகொலையால் ஏற்பட்ட வெற்றிடமானது உடனடியாக நிரப்பப்பட வேண்டிய பணியாகும். அதன்படி, அப்போதைய பிரதமர் டி.பி. விஜேதுங்க நியமிக்கப்பட்டார். அந்த வேளையிலும் பெரிய அரசியலமைப்புப் பங்கை நிறைவேற்றும் கடமை நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளருக்கு உண்டு.

அப்போது நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக பதவி வகித்த நிஹால் செனிவிரட்ன அந்த பாத்திரத்தை எவ்வாறு நிறைவேற்றினார் என்பது பற்றி அவர் வழங்கிய விளக்கமே இது.

நிறைவேற்று ஜனாதிபதிரணசிங்க பிரேமதாசவின் திடீர் மரணத்தின் பின்னர், டிங்கிரி பண்டா விஜேதுங்க அந்தப் பதவிக்கு வந்தார். அவர் அன்றைய பிரபல அரசியல்வாதி. மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதில் தனக்கே உரிய தனித்தன்மைகள் இருந்தன. வெளிப்படையாகத் தெரிந்த எளிமையான இருப்பு மற்றும் நட்பு அவர்களிடையே குறிப்பாக கவனிக்கத்தக்கது. அவர் பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களும் பிரபலமாக இருந்தன. "டி.பி." பொதுமக்களிடமிருந்து அன்பான விளக்கமும் கிடைத்தது. "கொடுத்தால் பெறுவாய்" என்பது இதன் பொருள். அவர் 1922 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி உடுநுவர பிரிமத்தலாவையில் பிறந்தார்.

1970-களின் நடுப்பகுதியில் இருந்து அரசியல் அரங்கில் உச்சத்தில் இருந்தவர்கள் இருவர். அவர்கள் லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்க. இருவரும் ஜே.ஆரின் "மேய்ப்பர்கள்". ஆனால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, டி.பி. விஜேதுங்கவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. இது விவேகமான செயலாக அங்கீகரிக்கப்பட்டது.

ஏனென்றால் அப்போதும் டி.பி. விஜேதுங்க அரசியல்துறையில் நன்கு "பரிபகவா" (புதித்த புத்திசாலி) ஆவார். நாடாளுமன்றத்தில் 25 ஆண்டுகள். 70-களில் இருந்து 80 வரை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தில், எரிசக்தி மற்றும் நெடுஞ்சாலைகள், தபால்கள் மற்றும் தந்தி அமைச்சர்களின் இலாகாக்களை அவர் வகித்தார்.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாச கொல்லப்பட்டதாக சபாநாயகர் 1993 மே 3 ஆம் திகதி காலை அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

"நாட்டின் ஜனாதிபதியின் படுகொலை நாட்டின் குடிமக்களை எல்லா வகையிலும் பாதித்தது. அந்த விளைவுக்கு இனம், கோத்திரம், சாதி, மதம், அரசியல் காரணமல்ல. சிறிலங்கா மக்களாகிய நாங்கள் ஜனநாயகத்தை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வதுடன், இந்த கோழைத்தனமான மற்றும் கோழைத்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்." இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த அரசியலமைப்பின் 38 ஆவது சரத்தின்படி, ஜனாதிபதியின் பதவியில் வெற்றிடம் இருப்பதாகவும், 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதிதேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் நான் விளக்கினேன். அந்தக் கட்டுரையின் 2 மற்றும் 5 பத்திகள்.

பின்னர் மேற்படி சட்டத்தின் 5 ஆவது பிரிவின் படி தற்போதுள்ள வெற்றிடத்திற்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது மே 7 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளதாக இரண்டாவது அறிவிப்பில் உள்ள உண்மைகளை நான் தெளிவுபடுத்தினேன்.

**அறிவிப்பு:**

மே, 7 ஆம் திகதி காலை, சபாநாயகர், "தேர்தல் குறித்து, நாடாளுமன்ற பொதுச் செயலாளர், நாடாளுமன்றத்தில் உண்மைகளை விளக்குவார்" என்று நாடாளுமன்றத்தில் அறிவிப்பு வெளியிட்டார்.

அதன்படி கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டேன்.



1970-களின் நடுப்பகுதியில் இருந்து அரசியல் அரங்கில் உச்சத்தில் இருந்தவர்கள் இருவர். அவர்கள் லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்க. இருவரும் ஜே.ஆரின் "மேய்ப்பர்கள்". ஆனால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, டி.பி. விஜேதுங்கவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. இது விவேகமான செயலாக அங்கீகரிக்கப்பட்டது.

6(1) ஜனாதிபதிபதவிக்கான வேட்புமனுக்களை பெறுவதற்கான விதிகளை நான் நாடாளுமன்றத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஜனாதிபதி தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1981 இன் பிரிவு 10 கூறுகின்றது:

6(1) வேட்புமனுக்களை பெறுவதற்கு திட்டமிடப்பட்ட நாளில் நாடாளுமன்றம் கூட்டப்படும் மற்றும் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தேர்தல் அதிகாரியாக செயற்படுவார்.

எந்தவொரு உறுப்பினரும் (நாடாளுமன்ற உறுப்பினர்) ஜனாதிபதிபதவிக்கு எந்தவொரு உறுப்பினரின் பெயரையும் முன்மொழிய விரும்பினால், அந்த பதவியின் (ஜனாதிபதி) கடமைகளை நிறைவேற்ற அந்த உறுப்பினரிடம் (நாடாளுமன்ற உறுப்பனர்) ஒப்புதல் (ஒப்பந்தம்) கடிதம் பெறப்பட வேண்டும்.

எந்தவொரு உறுப்பினரும் (நாடாளுமன்ற உறுப்பினர்) நேரடியாக நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளரிடம் பேசி, ஜனாதிபதிபதவிக்கு ஒருவரை நியமிக்கலாம். பிரேரணைக்கு வேறொரு உறுப்பினர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றாலும், விவாதத்திற்கு வாய்ப்பில்லை.

ஜனாதிபதிபதவிக்கு ஒரே ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் (நிரந்தரமானது), அந்த நபர் ஜனாதிபதிபதவிக்கு நியமிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பொதுச்செயலாளரால் அறிவிக்கப்படல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டால், சட்டத்தின் 3 ஆவது பிரிவின் துணைப்பிரிவு 2 இன் படி வாக்கெடுப்பு நடத்துவதற்கான திகதியையும் நேரத்தையும் நாடாளுமன்றம் நிர்ணயிக்கும். ஆனால் அந்தத் திகதியும் நேரமும் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதிதேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பத்தி 6 இன் பிரகாரம் நான் (நிஹால் செனிவிரட்ன) நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக நியமனம் கோருவதாக நான் (நிஹால் செனிவிரட்ன) அறிவித்தேன்.

அப்போது, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் விஜயபால மெண்டிஸ் கூறியதாவது:

**நாடாளுமன்ற உயர்ஸ்தானிகர்,**

1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பத்தி 1 இன் படி, கௌரவ டி.பி. விஜேதுங்கவை சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதிபதவிக்கு முன்மொழிவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அது தொடர்பில் இந்த நாடாளுமன்றம் சம்மதம் தெரிவித்தால் மேற்படி அலுவலகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சம்மதம் தெரிவிப்பதாக பிரகடனப்படுத்தும் ஆவணத்தை முன்வைக்கின்றேன்.

நீதி மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் அப்போது கூறியதாவது:

நாடாளுமன்ற உயர்ஸ்தானிகர், இந்த நாடாளுமன்றத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி.விஜேதுங்கவின் பெயரை உறுதிப்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் (நாடாளுமன்ற உயர்ஸ்தானிகர்) கேட்டேன்:

பரிந்துரைக்க வேறு பெயர்கள் உள்ளதா?

வேறு எந்த முன்மொழிவும் இல்லாததால், நான் அறிவித்தேன்:

கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி. விஜேதுங்க 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஜனாதிபதிதேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆவது பத்தி 4 இன் படி விஜேதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன். மாண்புமிகு ஜனாதிபதிஅவர்களே, உங்களுக்கு எனது மனமார்ந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, கௌரவ ஜனாதிபதிஅவர்களே, சிறிலங்காவின் மூன்றாவது நிறைவேற்று அரச தலைவரின் ஆசிகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதில் எனது மனநிறைவை அடைகின்றேன்.

ரணசிங்க பிரேமதாசவின் துரதிர்ஷ்டவசமான படுகொலையின் பின்னர் வெற்றிடமான பதவியை நீங்கள் நிரப்பியதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். நான் உங்களை 44 வருடங்களாக அறிவேன். யாரையும் புண்படுத்தாத வகையில் எழும் எந்தவொரு பிரச்சினையையும் அல்லது சர்ச்சையையும் தீர்க்கும் தனித்துவமான திறன் உங்களிடம் உள்ளது என்பதை நான் அறிவேன். முழு சிறிலங்கா சமூகத்தையும் அமைதியான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் திறன் உங்களிடம் இருப்பதாக நான் நம்புகின்றேன்.

கைத்தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சரும் சபைத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சிங்கள மொழியில் மிக நீண்ட உரையை ஆற்றி புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அனைத்து நாளாந்த கடமைகளும் நிறைவடைந்த பின்னர், புதிய ஜனாதிபதிடி.பி. விஜேதுங்க தனது பணிவான சுபாவத்துடன் எனது அலுவலகத்திற்கு வந்து, அவரின் நியமனத்திற்கு நான் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

"ஐயா, நான் எனக்கு அரசியலமைப்பு ரீதியாக ஒதுக்கப்பட்ட கடமையைச் செய்தேன், அதற்கு மேல் எதுவும் இல்லை," என்று நான் பதிலளித்தேன், "ஐயா, உங்கள் தலைமையில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றேன்." என் அன்பான வாழ்த்துக்கள்."

அடுத்ததாக நான் ஓய்வு பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அவருடைய அலுவலகத்தில் அவரைப் பார்க்கச் சென்றேன். அடுத்த வாரம் நான் ஓய்வு பெறும் செய்தியை அவரிடம் சொன்னவுடனேயே கலங்கிய ஜனதிபதி "நிஹால், கடந்த 30 வருடங்களாக நீங்கள் உங்கள் கடமைகளை எப்படிச் செய்தீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களைப் போன்ற ஒருவர் இல்லாமல் நான் எப்படி இங்கு வேலை செய்ய முடியும்? எனவே உங்களது சேவைக் காலத்தை நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வருமாறு என்னிடம் வேண்டுகோள் விடுங்கள்."

நான் அந்த வாய்ப்பை பணிவுடன் நிராகரித்தேன்.

"உங்களை ஏதாவது ஒரு நாட்டுக்கு தூதுவராக அனுப்புகின்றேன்" என்பது அவரது அடுத்த திட்டம்.

"நன்றி ஐயா, எனது இரண்டு குழந்தைகள் மற்றும் என் மனைவியுடன் ஹவ்லொக் வீதியில் உள்ள எனது வீட்டில் தங்க விரும்புகின்றேன்," நான் அந்த வாய்ப்பை நன்றியுடன் நிராகரித்தேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஜனாதிபதி தேர்தல் பற்றி மக்கள் நினைப்பது என்ன?

யூ.எல். மப்றூக்

இலங்கையில் பாரியதொரு அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. "அசைக்க முடியாத ஆட்சி" என்று ஒரு காலகட்டத்தில் - பலராலும் பேசப்பட்ட ராஜபக்ஷவினரின் அதிகாரமானது, மக்கள் போராட்டம் மூலமாக முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனாலும், நாட்டின் அரசியல் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை.

"கோட்டா வீட்டுக்கு போ" போராட்டத்தின் விளைவாக, இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றுள்ள நிலையில், "ரணில் வீட்டுக்குப் போ" எனக் கூறி, போராட்டக்காரர்கள் தமது கோஷத்தை மாற்றியிருக்கின்றனர்.

மஹிந்த, பசில், கோட்டா என ராஜபக்ஷவினரை அதிகாரத்திலிருந்து வீழ்த்துவதற்கு, கொழும்பு - காலி முகத்திடலில் ஒன்று திரண்ட மக்கள் பெரும் பங்காற்றினார்கள். ஆனால், தலைநகருக்கு வெளியேயும் தொலை தூர பிரதேசங்களிலும் உள்ள மக்களில் அதிகமானோர், இந்த விவகாரங்களை பெரும்பாலும் ஊடகங்கள் வழியாகவே அறிந்து கொள்கின்றனர்.

இந்த நிலையில், ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ ராஜினாமா செய்தமை, அதனால் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் மற்றும் நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதி தேர்வு போன்றவற்றை, தலைநகரிலிருந்து மிகவும் தூரத்திலுள்ள மக்கள் எப்படிப் பார்க்கின்றார்கள்?

அவர்களது கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை தொகுத்து தருகிறோம்.

### கோட்டாவின் முடிவு - மக்களின் சாபம்



கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டமையினை, அவர் செய்த பாவத்துக்கான தண்டனையாகவே தான் பார்ப்பதாகக் கூறுகின்றார், அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த எஸ். ஹரி பிரதாப்.

இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்களை அவர் கொன்றார். இறந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு எவ்வளவு மன வலி இருந்திருக்கும். அவர்களின் சாபம்தான் அவருக்கு இப்படி நடந்துள்ளது என நான் நம்புகிறேன்" எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இறுதி யுத்தத்தில் இறந்த மக்களின் கதறலும் அழுகையும் கண்ணீரும்தான் கோட்டாவின் இந்த நிலைக்குக் காரணமாகும் எனவும் அவர் சொல்கின்றார்.

"69 லட்சம் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தவர், மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறு விரட்டப்படுவதென்பது நடக்கக் கூடிய விடயமல்ல. ஆனால் நடந்திருக்கிறது. மனித மனங்களுக்குள்ள சக்தியினால்தான் இது சாத்தியமாகியுள்ளது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

"கோட்டாபய ராஜபக்ஷ - தனது அண்ணன் மஹிந்தவை நம்பி அரசியலுக்குள் வந்தவர். கோட்டா ஆட்சிக்கு வருவதற்கு முன்பே அவரின் அண்ணன் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் ஏராளமான ஊழல்கள் நடந்தன. அது கோட்டாவின் ஆட்சியிலும் தொடர்ந்த போது இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உள்ளதல்லவா? எங்காவது போய் முட்ட வேண்டுமல்லவா? அதுதான் நடந்துள்ளது".

இதன்போது புதிய ஜனாதிபதி தெரிவு குறித்துப் பேசிய அவர், "ரணில் போன்ற ஒரு திறமைசாலிதான் புதிய ஜனாதிபதியாக வரவேண்டும். ஆனாலும் ரணிலுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் - அவர் பிரதமராக இருந்த போது, அவருடன் இருந்தவர்கள் - மத்திய வங்கி மோசடி உள்ளிட்ட பல்வேறு பிழைகளைச் செய்தார்கள் எனச் சொல்லப்படுகிறது, அவற்றினை ரணில் தட்டிக் கேட்கவில்லை. அந்தப் பிழைகளை ரணில் தடுத்திருந்தால் அவருக்கு இவ்வளவு எதிர்ப்பு வந்திருக்காது" என்கிறார்.

"ஆனாலும் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு ரணில்தான் தகுதியானவராகத் தெரிகின்றார். சஜித் பிரேமதாஸவுக்கு வெளிநாட்டு ராஜதந்திர உறவில் எந்தளவுக்கு அனுபவமும் ஆற்றலும் உண்டு எனத் தெரியவில்லை. ஆனால் ரணில் விக்ரமசிங்கவுக்கு அவை இருக்கின்றன".

"ரணில் விக்ரமசிங்க அமைச்சராக இருந்தபோதுதான் யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. அதில் அவருக்கும் பங்கிருக்கும்தானே. சில நாட்களுக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டபோது, அங்கிருந்த அவரின் புத்தகங்கள் அழிந்து போயின எனக் கவலைப்படுகிறார். ஆனால், யாழ்ப்பாண நூலகத்தில் இருந்த புத்தகங்கள் - அவரின் வீட்டில் இருந்ததாகக் கூறப்படும் புத்தகங்களின் எண்ணிகையிலும் பல மடங்கு அதிகம்" எனக் கூறிய ஹரி பிரதாப் "இப்படி ரணில் மீது பல்வேறு விமர்சனங்கள் உள்ளபோதும், அவரின் அறிவு, திறமை, வெளிநாடுகளுடனான தொடர்புகள் போன்றவற்றின் நிமித்தம், அடுத்த ஜனாதிபதியாக அவரை ஏற்றுக் கொள்ள முடியும்," என்கிறார்.

### "அரசியலில் ரணில் நரி"

நாட்டில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் போது ஏற்பட்டிராத பொருளாதார நெருக்கடி, கோட்டாவின் காலத்தில் ஏற்பட்டு, முழு நாட்டினையும் பாதித்துள்ளது என்கிறார் - அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளரும் அரச உத்தியோகத்தருமான எம்.எப். நவாஸ்.

மக்களின் எதிர்பார்ப்பினை கோட்டா நிறைவேற்றவில்லை எனக் கூறும் அவர்



மக்களின் அன்றாட வாழ்வாதாரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டமையே கோட்டாபய ராஜபக்ஷ பதவியிழக்கக் காரணமாக அமைந்தது என்கிறார்.

"ராஜபக்ஷவினரின் ஆட்சியை - பல தசாப்தங்களுக்கு அசைக்க முடியாது என்றார்கள். ஆனால் மக்கள் போராட்டத்தின் முன்பாக அதுவெல்லாம் நின்று பிடிக்காது".

"நாட்டில் யுத்தம் நடந்தபோது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிகள் கூட, சில எல்லைகளுக்குள்தான் இருந்தன. ஆனால், கோட்டாவின் ஆட்சியில் - முழு நாடுமே பொருளாதார சீர்கேட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது. கோட்டாவுக்கு எதிரான இந்தப் போராட்டம் உணர்வு ரீதியானதாகும்" எனவும் நவாஸ் கருத்து வெளியிட்டார்.



இன்று நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதி தெரிவு குறித்து அவர் கூறுகையில் "ரணில் விக்ரமசிங்கவே அதற்குப் பொருத்தமானவராகத் தெரிகிறார்" என்றார்.

"நாடாளுமன்றத் தேர்தலின் போது மக்களால் அவர் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும் அவருக்கு பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது".

"ரணில் விக்ரமசிங்க - கடந்த காலங்களில் பிரதமராக இருந்து இந்த நாட்டை ஆட்சி செய்திருக்கிறார். அப்போது தந்திரோபாய ரீதியில் இனங்களுக் கிடையில் அவர் பிரச்சினைகளை மூட்டி விட்டிருக்கிறார் என்கிற குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஆனாலும் அவரின் ஆட்சியில் மக்களுக்கு வாழ்க்கைச் செலவு சுமையாக இருந்ததில்லை" என கூறினார்.

சர்வதேச ரீதியில் ரணில் பிரபல்யம் மிக்கதொரு நபர் எனக் குறிப்பிடும் ஊடகவியலாளர் நவாஸ் "அவர் அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்டவர், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் கூட அமைச்சராக இருந்தவர், பல தடவை அவர் பிரதமராகவும் பதவி வகித்தவர். அரசியலில் அவரை நரி என்கிறார்கள். அதனால் அவர் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமானவர்" என்கிறார்.

### சஜித் நல்லதொரு தெரிவாக அமையும்

இதேவேளை, "ஆட்சியாளர்களாக இருந்தவர்களைத் தவிர்த்து, புதியவர் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வது தற்போதைய நிலைமையில் பொருத்தமாக இருக்கும்" என்றும், "அதன்படி சஜித் பிரேமதாஸ நல்ல தெரிவாக அமையும்" எனவும் - கீரை வியாபாரத்தில் ஈடுபடும் கே. ஜெகநாதன் கூறுகிறார். இவர் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்.

"ராஜபக்ஷவினரை ராஜாக்கள் எனக் கூறிக் கொண்டிருந்தவர்கள்தான், கோட்டாவை விரட்டியிருக்கின்றனர். ஆனாலும், இதனை அவருக்கு கடவுள் கொடுத்த தண்டனையாகவும் தீர்ப்பாகவும் நான் பார்க்கிறேன். அந்தளவுக்கு அவர் தமிழ் மக்களைக் கொன்று குவித்தார். இதனை மக்கள் தீர்ப்பு என்பதை விடவும் இறைவனின் தீர்ப்பு என்று கூறுவதே பொருத்தமாகும்" எனவும், ஜெகநாதன் தெரிவித்தார்.

ஆட்சியாளர்களாக இருந்தவர்களைத் தவிர்த்து - புதியவர் ஒருவர் ஆட்சிக்கு வரவேண்டும் எனக் குறிப்பிடும் அவர் அரசாங்கமும் அவ்வாறுதான் அமைய வேண்டும் என்பது தனது எதிர்பார்ப்பாகும் எனவும் கூறினார்.



"இதற்கு பொருத்தமானவராக சஜித் பிரேமதாஸ உள்ளார். அவர் நல்லதொரு தெரிவாக இருப்பார்".

"ரணில் விக்ரமசிங்கவின் கடந்த கால ஆட்சிகளிலும் பிரச்சினைகள் இருந்தன. இதுவரையும் அவை தொடர்கின்றன" எனவும் ஜெகநாதன் கருத்து வெளியிட்டார்.

### சுப்ரமணிய சுவாமி சொல்வது போலில்லை

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வியாபார நிறுவனமொன்றை நடத்தி வரும் சுபைர், நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் "ராஜபக்ஷவினரின் குடும்ப ஆட்சி, இன ரீதியாக மக்களை கொடுமைப்படுத்தியமை மற்றும் கொவிட் காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை எரித்தமை போன்ற விடயங்கள், கோட்டா மீது கடுமையான கோபத்தை மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தது" என்கிறார்.

அந்த வகையில் அவரை பதவியிலிருந்து விரட்டியமை - போராட்டக்காரர்கள் செய்த நல்லதொரு விடயம் எனவும், மக்கள் பாற்சோறு வழங்கி அதனைக் கொண்டாடுகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.



"இந்தியாவின் மூத்த அரசியல்வாதி சுப்ரமணிய சுவாமி "69 லட்சம் மக்களின் ஆதரவுடன் வந்த கோட்டாவை எப்படி பதவி விலக்க முடியும்" என்று கேட்டிருந்தார். ஆனால், கோட்டாவை விரட்டியவர்களில் பெரும்பாலானோர் அவருக்கு ஆதரவளித்த 69 லட்சம் வாக்காளர்கள்தான்".

"கோட்டாவுக்கு எதிரான போராட்டம் உச்சமடைந்தபோது, இலங்கைக்கு இந்திய ராணுவம் அனுப்பப்பட வேண்டும் எனவும் சுவாமி கூறியிருந்தார். கோட்டாவை விரட்டியவர்கள் தீவிரவாதிகளல்லர் மக்கள்தான். அதனால் இங்கு ஏன் இந்திய ராணுவம் அனுப்பப்பட வேண்டும்" எனவும் சுபைர் கேள்வியெழுப்பினார்.

"அரசாங்கம் என்பது மக்கள். மக்கள் என்பது அரசாங்கம். மக்களுக்கு விருப்பமில்லை என்றால், ஆட்சியாளர்கள் போய் விட வேண்டும். ஆனால், இது தொடர்பாக கோட்டா இறுதியில் எடுத்த முடிவு தவறானது. அவர் முன்கூட்டியே போயிருக்க வேண்டும்".

"ரணில் விக்ரமசிங்கவை "கோட்டாவின் ஆள்" என மக்கள் கூறுகின்றனர். "ராஜபக்ஷ குடும்பத்தினரை மீண்டும் ரணில் காப்பாற்றுவாரா" என்கிற கேள்வி மக்களிடையே இருக்கிறது.

ஆனாலும் புதிய ஜனாதிபதி வெற்றிடத்தை நிரப்புவதற்கு ரணிலைத் தவிர வேறு தேர்வுகள் இல்லை. அதனால் ரணிலை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. சஜித், டலஸ் போன்றவர்களை விடவும் ரணில் பொருத்தமானவர்.


அவர் அரசியல் அனுபவத்தில் முதிர்ந்தவர், வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டவர், அதனால் அவர் இப்போதைய பிரச்சினைகளுக்கு ஏதாவது நல்ல தீர்வினைப் பெற்றுத் தருவார் என்கிற நம்பிக்கை இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்" என சுபைர் மேலும் கூறினார்.

(பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........   ii) 18, 15, 12, ............., ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.......................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.......................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6   2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130   2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 11100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190   2) 100   3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2


கல்வி tv CHANNEL-1

**20.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**20.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கும் ஜனாதிபதியே வேண்டும்

## சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கோரிக்கை

அம்பாறை, ஜூலை. 20

**தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து எமது நாட்டின் பொருளாதார பிரச்னை மற்றும் நாட்டு மக்களின் அபிலாஷைகளை தீர்க்கக்கூடிய புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தார்மீகப் பொறுப்பாகும் என சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்தார்.**



அம்பாறை மாவட்ட குருபீட காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் நாட்டின் ஜனாதிபதி பதவி விலகியதன் காரணமாகவும் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களுக்கும் இந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் அறவழி போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் ஒரு சிறந்த ஜனாதிபதியை தெரிவு செய்யக்கூடிய பொறுப்பு தமிழ் பேசும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் தமிழ் பேசும் கட்சிகள் கட்சி பேதங்களை மறந்து முஸ்லீம் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஜனாதிபதியை தெரிவு செய்யக் கூடிய தார்மீக பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்-என்றார். (அ)

# பெற்றோல் விநியோகத்தில் முறைகேடு இல்லாதொழிப்பது தொடர்பில் ஆராய்வு

அம்பாறை, ஜூலை. 20

பெற்றோல் விநியோகத்தில் முறைகேடுகளை இல்லாதொழிப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று சாய்ந்தமருது பிரதேச செயலக ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.எம். சம்சுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள், சாய்ந்தமருது லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிலைய உரிமையாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட செயலியை செயல்படுத்தும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# எரிவாயு விநியோகத்துக்கு விசேட நடைமுறை ஆரம்பம்

அம்பாறை, ஜூலை. 20

கல்முனை மாநகர பிரதேசங்களில் எரிவாயு மற்றும் எரிபொருள் விநியோகத்தை குளறுபடிகளின்றி சீராக முன்னெடுப்பதற்காக குடும்ப அட்டை மற்றும் பாஸ் முறைமை அமுலுக்கு வந்துள்ளது. இத் திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பில் அதிகாரிகள் மட்ட ஒருங்கிணைப்பு மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் பிரதேச செயலாளர்கள், மாநகர பிரதி முதல்வர், ஆணையாளர், பொலிஸ் அதிகாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிவாயு நிறுவனங்களின் பிராந்திய அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய விசேட செயலணி மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக கல்முனை மாநகர சபை மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கடந்த மாதம் 04ஆம் திகதி தொடக்கம் பல தடவைகள் இச்செயலணி மாநகர சபையில் கூடி, இப்பிரதேசங்களில் எரிவாயு, மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தின்போது ஏற்படுகின்ற குழப்பங்களை தவிர்ப்பதற்கும் முறைகேடான செயற்பாடுகள், பதுக்கல் மற்றும் கருப்புச்சந்தை வியாபாரத்தை முறியடிப்பதற்கும் அனைத்து மக்களுக்கும் அவை இலகுவாக கிடைப்பதற்கும் ஏற்ற வகையில் விநியோக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆலோசித்து, அதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டிருந்தது.

உத்தேச நடைமுறைகள் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை மாநகர முதல்வர் தலைமையிலான குழு வொன்று இரு தடவைகள் சந்தித்து, கலந்துரையாடியிருந்ததுடன் அவரது அனுமதி, ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டிருந்தது.

இதையடுத்து, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்துக் குடும்பங்களும் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான குடும்ப அட்டையும் அதனோடிணைந்ததாக வாகனங்களுக்கான எரிபொருள் கொள்வனவுக்காக விசேட அனுமதிப்பத்திரமும் (பாஸ்) கிராம சேவகர் ஊடாக தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் சில இடங்களில் எரிவாயு விநியோகம் குளறுபடியின்றி சீராக முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வந்ததும், இதே அடிப்படையில் குடும்ப அட்டையின் பிரகாரம் தேவையான ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதனை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகர முதலவர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக கடற்றொழில், விவசாயம், கைத்தொழில்துறைகளுக்கும் உணவுப் பண்டங்கள் உற்பத்தியாளர்களுக்கும் தேவையானளவு மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை அந்தந்த திணைக்களங்களின் சிபார்சுகளுக்கேற்ப முறையாக விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பாதிக்கப்பட்ட 140 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி விநியோகம்



அம்பாறை, ஜூலை.20

காரைதீவு 12 ஆம் பிரிவில் சமகால பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட 140 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி விநியோகம் செய்யப்பட்டது.

பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த காரைதீவைச் சேர்ந்த அகிலன் சுஜீவா தம்பதியினர் 140 குடும்பங்களுக்குமான 140 அரிசி பொதிகளை கையளித்தனர்.

இதன்போது, காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெக ராஜனும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)

# வியாபாரம் நடத்துவதற்கு வசதியாக வாகனங்களை அகற்ற வேண்டுகோள்



மட்டக்களப்பு, ஜூலை. 20

அக்கரைப்பற்று பிரதேசத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களால் வர்த்தக நிலையங்களைத் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 03 வாரங்களுக்கு மேலாக வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், கார் மற்றும் லொறி என்பன நிறுத்தி வைக்கப்பட் டுள்ளன.

இதனால் வியாபாகரியங்களை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.

பிரதான வீதி மற்றும் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குச் செல்லும் வீதி மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களால் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்கு செல்ல முடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இது தொடர்பாக அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பொலிஸார் ஆகியோர் நடவடிக்கை எடுத்து, குறித்த வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சிலிண்டர்கள், தங்க ஆபரணங்கள் திருட்டு; இளைஞர் ஒருவர் கைது

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் நீண்ட நாட்களாக வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்து வந்த 24 வயது இளைஞனை, நேற்று முன் தினம் இரவு கைதுசெய்துள்ளதாக, களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட எரிவாயு வெற்றுச் சிலிண்டர்-6, தங்கஆபரணங்கள், சிடி பிளேயர், 6,500 ரூபாய் பணம் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகியன இளைஞனிடமிருந்து மீட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# ஐரோப்பிய நாடுகளில் உயர் வெப்பம், காட்டு தீ!

## போர்த்துக்கல்லில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி!

பாரிஸ், ஜூலை. 20

மேற்கு ஐரோப்பிய நாடுகள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிக வெப்பநிலையை எதிர்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.



வடக்கு ஸ்பெயினில் நேற்று திங்கட்கிழமை 43 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவான நிலையில் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தில் தீவிர வெப்ப எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டன.

இதேவேளை, ஐரோப்பாவில் கடும் வெப்பநிலை தீவிரமாகி உள்ள நிலையில் பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.



இங்கிலாந்திலும் மிக மோசமான வெப்பநிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பிரான்ஸின் சில பகுதிகள் “வெப்ப பேரழிவை” எதிர்கொள்வதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிரான்ஸின் மேற்கு நகரமான நான்டெஸில் முன்னொரு போதும் இல்லாதவாறு நேற்று முன் தினம் 42 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

இதேவேளை, கடும் வெப்பம் காரணமாக எதிர்வரும் நாட்களில் காட்டுத் தீயால் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இவ்வாறு வெளியேறுவோரை தங்க வைப்பதற்காக அவசர முகாம்கள் அமைக்கப்பட் டுள்ளன.

பிரான்ஸின் தென்மேற்கில் உள்ள பிரபலமான சுற்றுலாப் பகுதியான ஜிரோண்டே வெப்பத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய் முதல் இங்கு மட்டும் கிட்டத்தட்ட 17,000 ஹெக்ரேயர் (42,000 ஏக்கர்) காடுகள் காட்டுத் தீயால் அழித்தன. தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடுகின்றனர்.

இதற்கிடையே, கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சபோல்க்கில் நேற்று முன் தினம் அதிகபட்சமாக 38.1 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானது. இ

கடும் வெப்பம் காரணமாக லண்டனின் லூடன் விமான நிலையத்தில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால் கடுமையான பயண இடையூறுகள் ஏற்பட்டன.

இதேவேளை, நெதர்லாந்து இந்த ஆண்டின் கடும் வெப்பத்தை நேற்று முன் தினம் திங்கட்கிழமை பதிவு செய்தது. நெதர்லாந்தின் தென்மேற்கு நகரமான வெஸ்ட்டோர்ப்பில் வெப்பநிலை நேற்று 33.6 பாகை செல்சியஸை எட்டியது.

நெதர்லாந்தின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் வெப்பநிலை நேற்று 39 பாகை செல்சியஸாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வெப்ப அலை வடக்கு நோக்கி நகர்வதால் பெல்ஜியம் மற்றும் ஜேர்மனியில் எதிர்வரும் நாட்களில் வெப்ப நிலை சுமார் 40 பாகை செல்கியஸாக ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக காலநிலை முன்னறிவிப்பாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல்லில் கடும் வெப்பத்தால் சமீபத்திய நாட்களில் 1,000 க்கும் மேற்பட்ட இறப்புகள் ஏற்பட்டுள்ளன.

வியாழன் அன்று போர்த்துக்கல்லில் வெப்பநிலை 47 பாகை செல்சியஸை எட்டியது. நாட்டின் பெரும்பாலான பகுதிகள் அதிக வெப்ப அபாய எச்சரிக்கையின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

தீ ஆபத்து காரணமாக போர்த்துக்கல் வடக்கு முர்கா நகராட்சியில் இருந்து 300 பேர் வெளியேற்றப்பட்டதாக உள்ளூார் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

2017 ஆம் ஆண்டு இப்பகுதியில் காட்டுத் தீயால் 66 பேர் பலியான நிலையில் இவ்வாறான ஆபத்து மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்க அதிகாரிகள் தீவிர முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஸ்பெயினில், குறைந்தது 20 தீ கட்டுப்படுத்த முடியாமல் எரிகிறது. போர்த்துக்கல்லின் வடக்கு எல்லைக்கு அருகே ஓடும் ரயிலின் இருபுறமும் தீ பரவியதால் அந்த ரயில் நிறுத்தப்பட்டு பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். (அ)

# பாரிஸ் மதுபான விடுதியில் திங்கள் இரவு துப்பாக்கி சூடு

## ஒருவர் பலி, நால்வர் காயம்



பாரிஸ், ஜூலை. 20

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஒரு மதுபான விடுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய இருவரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தப்பியோடிய மற்றொருவர் தேடப்பட்டு வருகிறார்.

இச்சம்பவம் உள்ளூர் நேரப்படி திங்கள்கிழமை இரவு 9.35 மணியளவில் பாரிஸ் 11ஆவது வட்டாரத்தில் நடந்ததாக சம்பவம் இடம்பெற்ற பகுதியான அரோண்டிஸ்மென்ட் மேயர் பிராங்கோயிஸ் வோக்லின் தெரிவித்துள்ளார்.

வாகனத்தில் இருந்து இறங்கிய 2 பேர் மதுபான விடுதிக்குள் சென்று அங்கு அமர்ந்திருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதனைத் தொடர்ந்த தப்பியோட முயன்ற ஆயுததாரிகள் இருவரில் ஒருவர் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டார். மற்றவர் தப்பியோடிவிட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஐந்து பேரில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மற்ற நான்கு பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்,

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர், காயமடைந்தவர்கள் மற்றும் துப்பாக்கிதாரிகள் அடையாளங்கள் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இந்த காட்டுமிராண்டித்தனமான செயலின் உள்நோக்கம் என்ன என்பது குறித்த தகவல்களை உடனடியாக அறிய முடியவில்லை என அரோண்டிஸ்மென்ட் மேயர் கூறினார். (அ)

# பொரிஸ் ஜோன்ஸன் வெற்றி!

லண்டன், ஜூலை. 20

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் அரசாங்கம் ஜூலை 18ஆம் திகதி தனக்குத்தானே அழைப்பு விடுத்திருந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்கள், தேசியத் தேர்தலைத் தூண்டுவதைத் தவிர்ப்பதற்காக அமைச்சர்களுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கடந்த 7ஆம் திகதி பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பதவி விலகியிருந்தாலும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி வலுக்கட்டாயமாக விரைவில் வெளியேற்ற வேண்டுமென வழிமொழிந்தது. ஆனால், பிரதமர் அவர் செல்வதாக ஏற்கனவே கூறியிருப்பதால் இது தேவையற்றது என்று அரசாங்கம் எதிர்த்தது. அதற்குப் பதிலாக பழமைவாதிகள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கைப் பிரேரணையை முன்மொழிந்தனர்.

எனினும், ஜோன்சன் அவராக முன்வந்து, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த அழைப்பு விடுத்து அதற்கான பணிகள் நடைபெற்றன. இதில், நேற்றிரவு நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு பற்றிய விவாதம் அந்நாட்டின் நாடாளுமன்ற வலைதளத்தில் ஒலிபரப்பப்பட்டது.

இதில் அரசாங்கம் 349க்கு 238 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதனால், பிரித்தானியாவில் பொது தேர்தல் நடைபெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.



செப்ரெம்பர் தொடக்கத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியால் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பிரதமராக செயற்படுவார். (அ)

# ஹைப்பர்சோனிக் ஏவுகணையை சோதித்து பார்த்தது அமெரிக்கா



நியூயோர்க், ஜூலை. 20

ஒலியை விட ஐந்து மடங்கு வேகமாக செல்லக்கூடிய ஹைபர்சோனிக் ஏவுகணையை சோதித்து பார்த்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ரைதோன் தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்த ஏவுகணையை சோதித்து பார்த்ததாகவும், 2013 முதல் நடத்தப்பட்ட 3ஆவது ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி என்றும் அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

எச்.ஏ.டபிள்யூ.சி வகை வான் சாதனங்களை தயாரிக்கும் முயற்சியில் அமெரிக்க பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இவ்வகை ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் வளிமண்டலத்தில் உள்ள காற்றை உறிஞ்சி கூடுதல் உந்து சக்தியை பெருக்கும் ஆற்றல் கொண்டவை எனக் கூறப்படுகிறது. (அ)

# கனமழையால் 5 அடுக்குமாடி கட்டடம் இடிந்து தரைமட்டம்



கராச்சி, ஜூலை. 20

பாகிஸ்தானின் கராச்சியில் தொடர் கனமழை வெளுத்து வாங்கிய நிலையில், மூசா காலனி பகுதியில் உள்ள 5 அடுக்குமாடி கட்டடம் ஒன்று இடிந்து தரைமட்டமானது.

ஓராண்டுக்கு முன்பு கட்டப்பட்ட புதிய கட்டடம் தரமற்ற கட்டுமானப் பொருட்கள் கொண்டு கட்டப்பட்டதாலேயே இடிந்து விழுந்திருக்க கூடும் என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில், அது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (அ)

ஈழநாடு



# இலங்கையுடனான டெஸ்ட் பாகிஸ்தான் வலுவான நிலை!

காலி, ஜூலை 20

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது. 7 விக்கெட்கள் கைவசம் உள்ள நிலையில் அந்த அணியின் வெற்றிக்கு 120 ஓட்டங்களே தேவையாகவுள்ளது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி முதல் டெஸ்ட் போட்டயில் தற்போது விளையாடி வருகின்றது. காலியில் நடக்கும் இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 222 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 218 ஓட்டங்களைப் பெற்றது.

மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இரண்டாவது இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தினேஷ் சந்திமால் 86 ஓட்டங்ளுடனும் பிரபாத் ஜெயசூரிய 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நான்காம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். 4 ஓவர்களே இந்த இணை தாக்குப்பிடித்தது. மேலதிகமாக எந்த ஓர் ஓட்டமும் பெறாமல் பிரபாத் ஜெயசூரிய ஆட்டமிழக்க, தினேஷ் சந்திமால் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.



இறுதியில் இலங்கை அணி 337 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் முஹமட் நவாஸ் 5, யசீர் ஷா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 342 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது பாகிஸ்தான் அணி.

அப்துல்லா சபீக், இமாம் உல் ஹக் இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை ஓரளவுக்கு சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. இமாம் உல் ஹக் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அசார் அலி, 6 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். பின்னர் வந்த அணித் தலைவர் பாபர் அஸாம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அப்துல்லா, பாபர் இணை சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை அமைத்து பாகிஸ்தான் அணியை வலுவான நிலை நோக்கிக் கொண்டு சென்றனர். அப்துல்லா இரண்டாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய, அரைச்சதம் கடந்த பாபர் அஸாம் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து முஹமட் ரிஸ்வான் அப்துல்லாவுடன் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்தபோது பாகிஸ்தான் அணி 84 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்துல்லா 112, ரிஸ்வான் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 2, மஹீஸ் தீக்ஷன 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இறுதி நாள் ஆட்டமாகும். (ஐ)



## இங்கிலாந்து அணியின் பென் ஸ்ரோக்ஸ் ஓய்வு!

லண்டன், ஜூலை 20

இங்கிலாந்து அணியின் பென் ஸ்ரோக்ஸ் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக நேற்று அவர் ஆடிய முதல் ஒருநாள் போட்டியே அவரின் இறுதிப் போட்டியாக அமைந்தது.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவரான பென் ஸ்ரோக்ஸ் அந்த அணிக்காக 104 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். 39.44 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் அவர், 2,919 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 3 சதங்கள் 21 அரைசதங்கள் அடங்கும்.

ஸ்ட்ரைக்ரேட் 95.26 ஆகவுள்ள நிலையில், 38 பௌண்ட்ரி 88 சிக்ஸர்களுடன். அதிகபட்ச ஓட்டங்களாக ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## அயர்லாந்து அணியை வீழ்த்தியது நியூசிலாந்து!

பெல்பாஸ்ட், ஜூலை 20

அயர்லாந்துக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

அயர்லாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி சென்று ஒருநாள் போட்டி தொடரை 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், இருபது - 20 தொடர் ஆரம்பமாகியுள்ளது. மிட்செல் சாண்ட்னர் தலைமையில் களமிறங்கிய முதல் போட்டியில், முதலில் நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது.

20 ஓவர்கள் நிறைவில், அந்த அணி 173 ஓட்டங்களை எடுத்தது. இதில் அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 69 ஓட்டங்களை எடுத்தார். ஜிம்மி நீஷம் 29, மார்டின் குப்தில் 24 ஓட்டங்களை எடுத்தனர்.

அடுத்து ஆடிய அயர்லாந்து அணி, 18.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 142 ஓட்டங்களை எடுத்தது. கம்பர் 29, மார்க் அடையர் 25 ஓட்டங்களும் எடுத்தனர்.

நியூசிலாந்து அணி சார்பில் பெர்குசன் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

## 2028 ஒலிம்பிக் போட்டிக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டன!

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூலை 20

2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி ஜப்பானின் ரோக்கியோவில் நடைபெற்றது. இதில், அமெரிக்கா 39 தங்கங்களையும் சீனா 38 தங்கங்களையும் வென்றன. அடுத்த ஒலிம்பிக் போட்டி 2024ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. 2028 ஜூலை 14இல் தொடங்கி ஜூலை 30இல் நிறைவு பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரா ஒலிம்பிக்ஸ் போட்டி ஓகஸ்ட் 15இல் தொடங்கி ஓகஸ்ட் 27ஆம் நாள் நிறைவுபெறவுள்ளது.

முன்னதாக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1932, 1984 என இரு முறை ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னாபிரிக்காவில் அணிகளை வாங்கின ஐ. பி. எல். அணிகள்!

கேப்டவுன், ஜூலை 20

இந்தியாவின் ஐ. பி. எல். அணிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள இருபது - 20 போட்டிகளில் 6 அணிகளை ஏலத்தில் வாங்கின என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐ. பி. எல். போன்றே இருபது - 20 தொடரை நடத்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இதில் இந்தியாவை சேர்ந்த 6 ஐ. பி. எல். அணிகள் தென்னாபிரிக்கவில் 6 அணிகளை ஏலம் எடுத்துள்ளன.

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் முன்னாள் தலைவரான கிரேம் ஸ்மித், அந்த நாட்டு கிரிக்கெட் சபையின் பணிப்பாளராகியுள்ளார். இது குறித்து உத்தியோகபூர்வ தகவல் விரைவில் வெளியாகவுள்ளது.

இந்நிலையிலேயே ஐ. பி. எல். அணிகள் அங்கு அணிகளை வாங்கியுள்ளன.

மும்பை இந்தியன்ஸ் - கேப்டவுன், சென்னை சுப்பர் கிங்ஸ் - ஜொஹன்னஸ்பேர்க், லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்- டர்பன், சன்ரைசர்ஸ் ஹைதராபாத்- போர்ட் எலிசபெத், டில்லி கப்பிட்டல் - பிரிட்டோரியா, ராஜஸ்தான் றோயல்ஸ் - பார்ல் அணிகளை வாங்கியுள்ளன. 2023ஆம் ஆண்டில் இந்தத் தொடர் நடக்கவுள்ளது. (ஐ)

## மேற்கிந்தியாவின் சிம்மன்ஸும் ஓய்வு


அன்டிகுவா, ஜூலை 20

மேற்கிந்தியத்தீவுகள் அணியைச் சேர்ந்த 37 வயது லெண்டில் சிம்மன்ஸ், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

16 வருடங்களாக மே. இ. தீவுகள் அணிக்காக 8 டெஸ்ட்கள், 68 ஒருநாள், 68 இருபது -20 போட்டிகளில் சிம்மன்ஸ் விளையாடியுள்ளார். 2006இல் பாகிஸ்தானுக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார்.

2016 இருபது - 20 உலகக்கிண்ணத்தை மே.இ. தீவுகள் அணி வென்றது. அப்போட்டியின் அரையிறுதிச் சுற்றில் இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடி வெற்றி பெற உதவினார்.

கடைசியாக மே.இ. தீவுகள் அணிக்காக 2021 இருபது - 20 உலகக் கிண்ணத்தில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சமூக ஊடகங்களில் பொய் தகவல்கள் பரப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 20
சமூக ஊடகங்கள் மற்றும் பிற வழிகளில் பொய்யான அறிக்கைகள் மூலம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் திகதி ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் 15 ஆம் சரத்தின் கீழ், இவ்வாறான வதந்திகளைப் பரப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துபவர்கள் அல்லது மக்களைத் திரட்டி, சட்டத்திற்கு எதிரான பதிவுகளை பதிவிடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தனியார் காணியிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 20
கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகாம்பிகைக் குளம் பகுதியில் உள்ள தனியார் காணியிலிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் துப்பரவுப் பணியில் ஈடுபட்ட நிலையில் இவை அடையாளம் காணப்பட்டன. இந்த நிலையில் பொலிஸாருக்கு காணி உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினரால் இவை நேற்று முற்பகல் மீட்கப்பட்டன.

இதில் மோட்டர் செல்கள், மகசின்கள், கண்ணீர் புகைக் குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு 07 - 07 -

உதிர்வு 28 - 06 - 2022

### பன்னீர்ச்செல்வம் செல்வரூபன் (ரூபன்)

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும், Doncaster ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பன்னீர்ச்செல்வம் செல்வரூபன் 28-06-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், பன்னீர்ச்செல்வம், காலஞ்சென்ற புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும்,கோகுலரமணா அவர்களின் அன்புக் கணவரும்,அபிநயா, அக்சயன், அனிருத் ஆகியோரின் அன்புத் தந்தையும்,செல்வமலர், புஸ்பதேவி, செல்வகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சிறிஸ்கந்தராஜா அவர்களின் அன்பு மாமாவும் ஆவார்.

கிரியை
Wednesday, 20 Jul 2022 10:00 AM - 12:30 PM
Manor Park Hall 316 b Malden Rd, New Malden KT3 6AU, United Kingdom

தகனம்
Wednesday, 20 Jul 2022 1:20 PM
North East Surrey Crematorium Cemetery Lodge, Lower Morden Ln, Morden SM4 4NU, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**செல்வகரன்(கரன்)**
**- சகோதரன் .**

தொடர்புகளுக்கு:
**செல்வகரன்(கரன்) - சகோதரன்** Mobile : +447943049655
**சிறிஸ்கந்தராஜா(அப்பு) - மருமகன்** Mobile : +447477948202
**பன்னீர்ச்செல்வம் - தந்தை** Mobile : +94766249716
**சுரேன் - மைத்துனர்** Mobile : +41765837579
**கோகுலரமணா - மனைவி** Mobile : +447538801391
**சிவலிங்கம்(லிங்கம்) - உறவினர்** Mobile : +447850683875

# போராட்டத் தியாகங்களுக்கு துரோகமிழைக்கமாட்டோம்

## சட்டத்தரணி சுகாஸ் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20
நிபந்தனைகளை ஏற்கத் தயாரில்லாதவர்களை ஆதரித்து எமது மக்களுக்கும் விடுதலைப்போராட்டத்தின் தியாகங்களுக்கும் ஒருபோதும் துரோகமிழைக்க மாட்டோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அன்புக்குரிய தமிழ்த் தேச மக்களே! ஜனாதிபதித் தெரிவு தொடர்பாகச் சகல வேட்பாளர்களோடும் தமிழினத்தின் அபிலாஷைகளையும் நலன்களையும் முன்னிறுத்திப் பேச்சுக்களையும் பேரம் பேசல்களையும் மேற்கொண்டுள்ளோம்.

இதன்படி, சஜித் பிரேமதாஸ தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாகப் பஞ்சாயத்து முறையையே பரிசீலிப்பவர், ரணில் விக்கிரமசிங்க மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய இருவரும் ராஜபக்ஷர்களை பாதுகாப்பவர்கள் மற்றும் அநுரகுமார திஸநாயக்க சார்பில் உறுதியற்ற,தெளிவற்ற மழுப்பல் பதில்களே உள்ளன.

ஆகவே தமிழரின் நியாயமான அபிலாஷைகளை ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்க மறுத்ததால் ஜனாதிபதித் தெரிவிலிருந்து ஒதுங்குகின்றோம்.

எமது நிபந்தனைகளை ஏற்கத் தயாரில்லாதவர்களை ஆதரித்து எமது மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்தின் தியாகங்களுக்கும் ஒருபோதும் துரோகமிழைக்கமாட்டோம்- என்றுள்ளது. (அ)

# சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குபணிமனை யாழ்.ஆயரினால் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
சில்லாலை புனித யாகப்பர் ஆலய பங்கு பணிமனை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்துவைக்கப்பட்டது

சில்லாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய பங்குத்தந்தை அருட்பணி பாலதாஸ் பிறையன் தலைமையில் கடந்த சனிக்கிழமை 16 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை புதிய பங்கு பணிமனை யாழ்.



ஆயர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டு திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் அயல் பங்குகளின் அருட்பணியாளர்கள், ஆலய பங்குமக்கள் கலந்து கொண்டனர்.

இவ் பங்குபணிமனையை இவ் ஆலயத்தைச் சேர்ந்த அமரர்களான திரு. திருமதி இராயப்பு ஞானம்மா குடும்பத்தின் பிள்ளைகளின் முழுமையான நிதி பங்களிப்பில் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரயில் பயணச்சீட்டுகளுக்கு தட்டுப்பாடு?

கொழும்பு, ஜூலை 20
ரயில் நிலையங்களில் அச்சிடப்பட்ட பயணச்சீட்டுகளின் கையிருப்பு குறைந்து வருவதால் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயத்தில் இலங்கை ரயில்வே எவ்வித அக்கறையும் காட்டவில்லை என சங்கம் தெரிவித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களத்தில் பயணச்சீட்டு அச்சடிக்கும் நடைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அச்சிடும் உபகரணங்கள் இலங்கை ரயில்வே தலைமையகத்தில் உள்ள அச்சிடும் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற பணியாளர்கள் மற்றும் போதிய பணியாளர்களை பணிக்கு நியமிக்காததால் செயற்பாடுகள் மந்தமடைந்துள்ளதாக நிலைய அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்தப்படாவிட்டால், கொழும்பு கோட்டை, மருதானை, கம்பஹா, வெயங்கொடை, ராகம ரயில் நிலையங்கள் மற்றும் பல உப நிலையங்களில் பயணச் சீட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்துக்கு அமைய எரிபொருள் விநியோகிக்கும் நாட்களில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 20
வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்துக்கமைய எரிபொருள் விநியோகிக்கும் நாட்களில், திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடு முழுவதும் எதிர்வரும் 21 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்துக்கமைய, எரிபொருள் வழங்கப்படும் நாட்களில் இவ்வாறு மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, 0,1,2 ஆகிய இலக்கங்களுக்கு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும், 3,4,5 ஆகிய இலக்கங்களுக்கு வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளிலும், 6,7,8,9 ஆகிய இலக்கங்களுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21 முதல் 24 வரையான திகதிகளில் கொழும்பின் பல இடங்களில் எரிபொருள் பெறுவதற்காக கியூ.ஆர் குறியீடு பரிசோதிக்கப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

## விகாரையை...

கைவாங்கப்பட்டது.

முன்னதாக, நேற்று இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது வாதிட்ட பிரதி சொலிசிடர் ஜெனரல் குருந்தூர்மலை ஒரு பௌத்த தொல்லியல் இடம் எனவும் அங்கே புதிய கட்டுமானங்கள் எவையும் இடம்பெறவில்லை எனவும் மாறாக தொல்லியல் சட்டங்களுக்கு உட்பட்டு தொல்லியல் சின்னங்களை பராமரித்து பாதுகாக்கும் செயல்பாடே முன்னெடுக்கப்படுவதாகவும், ஐயனார் ஆலயம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றை தவறாக வழிநடத்தி இந்த தீர்ப்பை பெற்றுள்ளதாகவும் இந்த ஆலய விவகாரம் தொடர்பில் உச்ச நீதிமன்றில் இன்னொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்கு தொடர்பில் மன்றின் கவனத்துக்கு கொண்டுவராது ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் வாதிட்ட சட்டத்தரணிகள் நடந்துகொண்டுள்ளதாகவும் மன்றில் தெரிவித்தார்.

ஐயனார் ஆலயம் சார்பில் வாதிட்ட மூத்த சட்டதரணி அன்ரன் புனிதநாயகம் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டு வருவது புதிய கட்டுமானங்கள் தான் எனவும் தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் புதிய கட்டுமானங்களை அமைத்துள்ளதாகவும் அதற்கான ஆதாரங்களை ஏற்கனவே மன்றின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும் அத்தோடு இந்த கட்டுமானங்கள் ஏற்கனவே மன்று 2018 இல் வழங்கிய கட்டளையை மீறி அமைக்கபட்டுள்ளதாகவும் மன்றில் சுட்டிகாட்டியதோடு குருந்தூர் மலைக்கு நேரடியாக சென்று இடம்பெற்றுவரும் புதிய கட்டுமானத்தை பார்க்க முடியும் எனவும் எனவே கௌரவ மன்று மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் இதனை நேரில் சென்று பார்க்க வேண்டும் என கேட்டுகொண்டதற்கு இணங்க வழக்கு விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டு நீதவான் மற்றும் சட்டமா திணைக்கள அதிகாரிகள் சட்டதரணிகள் கட்டுமானம் இடம்பெற்றுவரும் குருந்தூர் மலைக்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

அங்கு நிலைகளை பார்வையிட்டதன் பின்னர் மீண்டும் நீதிமன்றில் குறித்த வழக்கிற்கான புதிய திருத்திய கட்டளையை நீதிபதி பிறப்பித்தார்.

அதில், தொல்லியல் சின்னங்கள் பாதுகாப்பதாக கூறி தொல்லியல் சின்னங்கள் மூடிமறைக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் 14.07.2022 ம் திகதி கட்டளையில் புதிய விகாரைகள் மற்றும் கட்டடங்கள் நீக்கப்பட வேண்டும் என்ற கட்டளையின்பால் அவற்றை நீக்கும் போது தொல்லியல் சின்னங்களும் நீக்கப்படும் என்பதால் தொல்லியற் சின்னங்களை பாதுகாக்க வேண்டிய நிலை காணப்படுவதால் குறித்த புதிய விகாரைகள் கட்டடங்கள் நீக்கப்படவேண்டும் என்ற கட்டளை கை வாங்கப்படுகின்றது. எனவும் தெல்லியற் திணைக்களம் 12.06.2022 இல் இருந்தது போலவே குறித்த பிரதேசத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. (ஐ)

## ரணிலுக்கு...

இதேநேரம், நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெருமவுடன் சஜித் பிரேமதாஸ, ஜீ. எல். பீரிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். இந்தக் கூட்டத்தின் இறுதியில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாக முடிவு எடுத்தது.

ஜனாதிபதி தெரிவில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்றைய தினமும் நடந்தது. பலத்த வாதப் பிரதிவாதங்களுடன் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், ரணிலுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதே நிலைப்பாடு என்பதை சம்பந்தன் தெரிவித்தார்.

இந்த விடயத்துக்கு சிறீதரன் எம். பி உள்ளிட்ட தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் தங்களுக்கும் அந்தத்தரப்பிலிருந்து இவ்வாறான அழைப்பு கிடைத்ததாகத் தெரிவித்தனர்.

எனினும், சிறீதரன் உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை கடுமையாக ஆட்சேபித்தனர். அவர்களை சமரசம் செய்யும் முயற்சி இடம்பெற்றது.

கூட்டத்தின் இறுதியில், நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தின் நடுவே பங்கேற்றிருந்த சஜித் பிரேமதாஸ நேற்றைய தினம் ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். அவருடன், ஜீ. எல். பீரிஸ், டிலான் பெரேராவும் வந்திருந்தனர்.

அரசியல் கைதிகள் விடுதலை, நிலம் மற்றும் ஆக்கிரமிப்பு பிரச்னைகள் போன்ற உடனடியாக தீர்க்கக்கூடிய பிரச்னைகளை கால எல்லை நிர்ணயித்து தீர்ப்பதற்கு முன்வருவதாக உறுதியளித்தார். மேலும், தமிழர் பிரச்னைக்கு விரைவான - நிரந்தர - எதிர்பார்க்கும் தீர்வைத் தரவும் உறுதிமொழி அளித்திருந்தார்.

இதனிடையே, எழுத்துமூல உத்தரவாதத்தைப் பெற்று டலஸூக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முடிவுக்கு வந்தனர்.

இறுதியில், டலஸ் அழகப்பெருமவுக்கு வாக்களிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏகமனதாகத் தீர்மானம் எடுத்தது. (ஐ)

## வாரத்தில்...

ரெம்பர் 7ஆம் திகதி வரையில் நீடிக்கப்படவுள்ளது. இரண்டாம் மற்றும் 3ஆம் தவணையை நடத்துவதற்கான கால எல்லை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதலாம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையில், திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 25ஆம் திகதி முதல் அது தொடர்பான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், முதலாம் தவணை பரீட்சை நடத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேநேரம், திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வாராந்தம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய 3 தினங்களில் மாத்திரம் பாடசாலைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நடத்தப்படாத புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் இணையவழியில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## விலகினார்...

இட்ட பதிவில் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

டலஸ் அழகப்பெரும தரப்புடன் ஏற்பட்ட இணக்கப்பாட்டை அடுத்தே குறித்த முடிவை சஜித் எடுத்துள்ளார்

புதிய ஜனாதிபதியாக டலஸ் வெற்றி பெற்றால் சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்படுவர் என கருதப்படுகின்ற நிலையில் சஜித் தனது விலகலை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரணில்,...

செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதையடுத்து இன்று பாராளுமன்றில் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படுவார். (அ)

## பாராளுமன்றில்...

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட விரும்புபவர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்காக நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

இதன்போது சபாநாயகர் 2022 ஜூலை 16ஆம் திகதியான சனிக்கிழமை அறிவித்தமை போன்று தற்போது ஏற்பட்டுள்ள ஜனாதிபதி பதவிக்கான வெற்றிடத்துக்கு உறுப்பினர் ஒருவரை தெரிவதற்காக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம், அரசியலமைப்பின் 1981ஆம் ஆண்டு 02ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆவது சரத்துக்கு அமைய தெரிவத்தாட்சி அதிகாரியாக செயல்பட்டு வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் கடமையில் ஈடுபடுவார் என்பதை சபைக்கு அறிவிக்கின்றேன் என்று தெரிவித்தார்.

இதன்போது எழுந்து நின்று உரையாற்றிய பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க

"1981ஆம் ஆண்டு 2ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6ஆவது சரத்துக்கு அமைய எந்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் தமது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று செயலாளரை விளித்து, ஏற்பட்டுள்ள ஜனாதிபதி வெற்றிடத்துக்கு பாராளுமன்றத்துக்கு தற்போது வருகை தந்துள்ள யாரேனும் ஒருவரின் பெயரை முன்மொழிய வேண்டும். அந்த முன்மொழிவை மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் வழிமொழிய வேண்டும். எனினும் இதனை விவாதத்துக்கு உட்படுத்த முடியாது.

பெயர் முன்மொழியப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் ஜனாதிபதி பதவியை ஆற்றுவதற்கு அவர் விருப்பத்துடன் இருக்கின்றார் என்பதை கடிதம் மூலம் முதலிலேயே அறிவிக்க வேண்டும் என்பதுடன் அதன் நகல் பத்திரத்தை இன்றைய தினம் (நேற்று) எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களே! ஜனாதிபதி தெரிவுக்கான பெயரை முன்மொழிவதற்கு தற்போது காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது" என்று சபையில் அறிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுந்து நின்று, "இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி தெரிவுக்காக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் பெயரை நான் முன்மொழிகின்றேன்", என்றார்.

டலஸ் அழகப்பெருமவின் பெயரை வழிமொழிவதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ. எல். பீரிஸ் அறிவித்தார்.

அதன்பின்பு எழுந்த ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன, "இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்து கொள்வதற்காக இந்த உயரிய சபையின் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை முன்மொழிகின்றேன்" என்றார்.

இதனை மனுச நாணயக்கார எம்.பி வழிமொழிந்தார். அவர் வழிமொழியும் போது சபையில் கூச்சலிடப்பட்டுள்ளது.

சபையில் மிக முக்கியமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, வருவதாகவும் எனவே மிகவும் அமைதியாக செயல்படுமாறும் சபாநாயகர் கோரினர்.

இதனையடுத்து தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுந்து நின்று 2022 ஜனாதிபதி தெரிவுக்காக தேசிய மக்கள் சக்தி சார்பில் அநுரகுமார திஸநாயக்கவின் பெயரை முன்மொழிவதாக அறிவித்தார்.

இதனை அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரணி அமரசூரிய வழிமொழிந்தார்.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களான ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸநாயக்க ஆகிய மூவரின் பெயர் ஜனாதிபதி தெரிவுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்பதை செயலாளர் நாயகம் சபையில் அறிவித்தார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற செயலாளர் நாயகம், ஜனாதிபதி பதவிக்காக முன்மொழியப்பட்ட மூவரின் பெயர்களையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன் என்பதை பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

1981ஆம் ஆண்டு 2ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4, 6ஆவது சரத்துகளுக்கு அமைய தற்போது ஏற்பட்டுள்ள ஜனாதிபதி பதவியில் வெற்றிடத்துக்கு ஒருவரின் பெயருக்கு பதிலாக மூவரின் பெயர் முன்மொழியப்பட்டு அந்த பெயர்கள் வழிமொழியப்பட்டுள்ளதால், அந்த சட்டத்தின் 3ஆவது சரத்துக்கு அமைய ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஜூலை மாதம் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கெனவே இணங்கியதை போன்று 2022ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி (இன்று) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெறும் என்று தீர்மானிக்கப்பட்டதை சபைத் தலைவர் தற்போது சபைக்கு அறிவிப்பார்", என்றார்.

இதன்போது எழுந்து சபை தலைவர் தினேஸ் குணவர்த்தன அந்த தீர்மானத்தை சபைக்கு அறிவித்தார்.

இதனையடுத்து சபை அமர்வு நாளை (இன்று) முற்பகல் 10.00 மணிவரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். இதையடுத்து, இன்று முற்பகல் 10 மணிக்கு சபை கூடும். (ஐ)

## சகல...

வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் நாட்டில் தொடர்ந்தும் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளால் பாடசாலைகளை ஆரம்பிப்பது பிற்போடப்பட்டுள்ளது.

வரும் 25ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பித்து , கற்பித்தல் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்வி பணிப்பாளர்கள், வலய கல்வி பணிப்பாளர்கள் மற்றும அதிபர்கள் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் ஆலோசனை கோவை வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய கற்பித்தல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கூட்டமைப்பு...

என்று தீர்மானித்த பின்னரே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் இரா. சம்பந்தனின் இல்லத்தில் கூடிப் பேசினர். இதன் முடிவில் ஜனாதிபதி தெரிவில் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தின் முடிவில் டலஸ் அழகப்பெரும, சஜித் பிரேமதாஸ, ஜீ. எல். பீரிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், இந்தச் சந்திப்பு முடிவுற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தினார். நள்ளிரவை அண்மித்த சமயத்தில் இடம்பெற்ற இந்தப் பேச்சுக் குறித்து உடனடியாக தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ஐ)

## சிறுபான்மை...

கிரஸ் கட்சிகள் தமது ஆதரவு டலஸ் அழகப்பெருமவுக்கே என்று அறிவித்துள்ளன.

இதேசமயம், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியும் டலஸ் அழகப்பெருமவுக்கே தங்கள் ஆதரவு என்று நேற்று தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்தியா உதவும்



கொழும்பு, ஜூலை 20

இலங்கைக்கு விரைவான மற்றும் பயனுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்தியா உதவும் என கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் மாற்றம் சுமூகமாக இருக்க வேண்டும் என இந்தியா விரும்புகிறது எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கு கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கிய இந்தியா, பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பல முதலீட்டைக் கொண்டுவரும் என்றும் அவர் உறுதியளித்தார். (அ)

# எம்.பிக்களுக்கு விசேட பாதுகாப்பு!

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள இன்று பாராளுமன்ற வளாகம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயமாக கருதி பாதுகாப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பிற்கு வெளியேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்புக்கு வரவழைத்து அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை பொல்துவ மன்சந்தி மற்றும் பாராளுமன்றத்திற்கு செல்லும் ஏனைய வீதிகளில் அப்பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் மாத்திரமே பயணிக்க அனுமதி வழங்கப்படவுள்ளது.

போராட்டக்காரர்கள் பாராளுமன்ற வளாகத்தினை முற்றுகையிட முயன்றால், அவர்களுக்கு எதிராக அதிக பட்ச பலத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் இணைந்து பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் அடங்கிய குழுவிடம் பதில் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் எவ்வித இடையூறும் இன்றி பாராளுமன்ற கூட்டங்களை நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கையை நடைமுறைப்படுத்துமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த குழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# கியூ.ஆர். கோர்ட் யாழில் விற்பனை!

யாழ்ப்பாணம், ஜூலை 20

எரிபொருளுக்கான தேசிய பாஸ் நடைமுறைப் படுத்தப்படவுள்ள நிலையில் , பாஸை அடையாள அட்டை போன்றும் , கீ டேக் போன்றும் செய்து கொடுத்து கட்டணம் அறவிட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் கியூ.ஆர் கோட்டினை வாகனத் திறப்புக்களில் மாட்டி விடக் கூடியவாறாக கீ டேக் வடிவில் செய்து கொடுக்கின்றார். அதற்காக அவர் 600 ரூபாயினை அறவீடு செய்கின்றார்.

அதே போன்று மற்றுமொருவர் அடையாள அட்டை போன்று கியூ.ஆர் கோட்டினை வடிவமைத்து கொடுக்கின்றார். அதற்காக அவர் 300 ரூபாயினை அறவீடு செய்கின்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்வில் ரணில்தான் வெல்வார்!

## மனோ கணேசன் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 20

**ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவே ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தார் என்று கூறினால் அது முட்டாள்தனமான எண்ணப்பாடாகும் என்று தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ராஜபக்ஷக்களை ஒட்டுமொத்தமாக விரட்டியடிப்பதற்காகவே அவர் வருகை தந்தார் என்பதே எனது எண்ணப்பாடாகும் என்றும் கூறினார்.**

இதேவேளை, இன்று நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார் என்றும், அதற்கான சாதக நிலை தற்போது காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைவரம் மற்றும் புதிய ஜனாதிபதிக்கான தேர்தல் ஆகியவை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்டகால அரசியல் தொடர்பில் இருந்து வருகின்றேன். அவரைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருக்கின்றேன். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக பாராளுமன்றம் வரவில்லை. ஏதோ ஒன்று



சாதித்துக் காட்டவேண்டும் அல்லது தன்னுடைய கட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே தவிர அவர் வெறுமனே பாராளுமன்றத்துக்கு வரவில்லை.

தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதற்காகவே வருகை தந்தார் என்று கூறினால் அது முட்டாள்தனமான எண்ணப்பாடாகக் கருதுகின்றேன். மாறாக அவர் வருகை தந்தமையானது ராஜபக்ஷக்களை விரட்டியடிப்பதற்கே ஆகும். பஸில் ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய மூன்று ராஜபக்ஷக்களையும் அவர் தற்போது விரட்டியடித்துவிட்டு பதில் ஜனாதிபதியாக அமர்ந்திருக்கின்றார்.

இன்று வரை பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க இன்று இடைக்கால ஜனாதிப தியாகவும் வெற்றிபெற வாய்ப்பு உண்டு.

இன்று நடைபெறவிருக்கின்ற இடைக்கால ஜனாதிபதித் தேர்தலின்போது அவருக்கு அதிக வாய்ப்பு காணப்படுகின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களிப்பது உறுதியாகி இருக்கின்றது. அதற்கான பிரகாசமான வெளிப்பாடு தென்படுகின்றது- என்றார். (அ)

# சகல கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் ஜனாதிபதியை தெரிவு செய்யவேண்டும்

கொழும்பு, ஜூலை 20

பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என மார்ச் 12 இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் அதிகபட்சமாக ஒரு வருடத்திற்கான வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கான குழுவொன்றும் இதன் ஊடாக நியமிக்கப்பட வேண்டும் எனவும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுபவர்கள் தமது வேலைத்திட்டத்தை நாட்டுக்கு முன்வைக்க வேண்டும் எனவும் மார்ச் 12 இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இவ்வாறு முன்வைக்கப்படும் திட்டங்களை பொதுமக்கள் ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அந்த இயக்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

மேலும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்து அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே இடைக்கால அரசாங்கத்தின் கடமையாகும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவதை விடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டுக்கான தமது கடமையை ஆற்ற வேண்டும் எனவும் மார்ச் 12 இயக்கம் தெரிவித்துள்ளது. (அ)

# 4 சிறுவர்கள் உள்ளிட்ட மேலும் ஏழு பேர் தனுஷ்கோடி அருகே மணல் திட்டில் மீட்பு!

## இலங்கையில் இருந்து படகில் பயணித்தவர்கள்

சென்னை, ஜூலை 20

இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழ்நாடு சென்ற 4 சிறுவர்கள் உட்பட மேலும் 7 பேர் தனுஷ்கோடி அருகே மணல் திட்டு பகுதியில் மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கையைச் சேர்ந்த மேலும் ஏழு பேர் படகு மூலமாக தனுஷ்கோடியை அடுத்துள்ள ஐந்தாவது மணல் திட்டில் நேற்று தஞ்சமடைந்திருந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த இந்திய கடலோர காவல் படையினர் அவர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையை சேர்ந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் மீட்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நாவற்குழிப் பகுதியை சேர்ந்த மேரி அகஸ்ரா - நியூட்டன் நிமல்ராஜன் (வயது-44),ஆகாஷ் - நியூட்டன் நிமல்ராஜன் (வயது-16), கெவின் - நியூட்டன் நிமல்ராஜன் (வயது-12) மற்றும் திருகோணமலை, ஆனந்தபுரியை சேர்ந்த கணேசப்பிள்ளை - மகேசன் (வயது-39), தேவி - மகேசன்(வயது-38), டினாஸ் - மகேசன் (வயது-10), கம்சன் - மகேசன் (வயது-6) ஆகியோரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரை 123 பேர் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)



7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ரஜனி முருகன்,காக்கா முட்டை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு